# நடப்பு நிகழ்வுகள் - ஜூலை 1 – 31, 2023



| வ. எண். | தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலங்கள் | 10 |
| 3 | தேசிய செய்திகள் | 13 |
| 4 | திட்டங்கள் | 22 |
| 5 | நீதிமன்ற தீர்ப்புகள் | 23 |
| 6 | சர்வதேச செய்திகள் | 24 |
| 7 | இந்தியா மற்றும் இதர நாடுகள் | 28 |
| 8 | மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள் | 30 |
| 9 | பாதுகாப்பு | 39 |
| 10 | விருதுகள் | 42 |
| 11 | பொருளாதாரம் | 45 |
| 12 | புகழ்பெற்ற நபர்கள் | 46 |
| 13 | புத்தகங்களும் ஆசிரியர்களும் | 47 |
| 14 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் | 49 |
| 15 | விளையாட்டுகள் | 57 |
| 16 | நினைவில் நின்றவர்கள் | 61 |
| 17 | தரவரிசைப் பட்டியல் | 62 |
| 18 | அறிக்கைகள் | 64 |
| 19 | முக்கிய தினங்கள் | 67 |
| 20 | மற்றவை | 71 |
| 21 | நடப்பு நிகழ்வுகள் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அசல் கேள்விகள் மற்றும் பதில்கள் - மே மற்றும் ஜூலை 2023 மாதங்களில் நடத்தப்பட்ட தேர்வுகள் | 72 |

# தமிழ்நாடு

- **தமிழ்நாட்டின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி**
- ✓ தமிழ்நாடு – மார்ச் 2023இல் முடிவடைந்த நிதியாண்டில் நாட்டின் முன்னணி மின்னணு ஏற்றுமதி செய்யும் மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- ✓ ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள ஏற்றுமதி தரவுகளின்படி, தமிழகத்தின் மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி 2023 நிதியாண்டில் 5.37 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. இது முந்தைய ஆண்டில் 1.86 பில்லியன் டாலராக இருந்தது.
- ✓ இதன்மூலம் 2022 நிதியாண்டில் நான்காவது இடத்திலிருந்து, 2023 நிதியாண்டில் நமது மாநிலம் முதலிடத்திற்கு முன்னேற உதவியாக இருந்துள்ளது.
- ✓ இதன்மூலம், 2014இல் நோக்கியா மூடப்பட்ட பிறகு, முதல் முறையாக உத்தரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா போன்ற தொழில்துறை முன்னணி மாநிலங்களை தமிழ்நாடு விஞ்சியுள்ளது.

**ELECTRONICS EXPORTS** (in $ billion)

| | TN | UP | Maharashtra | Karnataka |
|---|---|---|---|---|
| 2022-23 | **5.3** | 4.9 | 2.6 | 4.5 |
| 2021-22 | **1.8** | 3.8 | 2.1 | 3.9 |
| 2020-21 | **1.6** | 2.8 | 1.6 | 2.3 |

Source: National Import-Export Records

- ✓ திறமையான மனிதவளம், துறைமுக இணைப்பு மற்றும் நல்ல உள்கட்டமைப்பு ஆகியவை தமிழ்நாட்டின் முக்கிய நன்மைக் காரணிகளாகும்.

- **அரிகண்டம்**
- ✓ ஆராய்ச்சியாளர்கள் - சிவகங்கை மாவட்டம் சோழபுரம் அருகே 1000 ஆண்டுகள் பழமையான அரிகண்டம் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.




- ✓ 'அரிகண்டம்' என்பது காளி தேவிக்கு செய்த சபதத்தை நிறைவேற்றுவதற்காக தலையைத் துண்டித்து தனது உயிரை மாய்த்துக் கொண்ட ஒருவரின் நினைவாக நிறுவப்பட்ட சிலையைக் குறிக்கிறது.
- ✓ சோழபுரத்திற்கும் நாலுக்கோட்டை கிராமத்திற்கும் இடையே உள்ள பிடாரி அம்மன் கோவிலில் இந்த சிலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

- ‘அரிகண்டம்’ என்பது ஒரு மனிதன் போரில் வெற்றி பெற்றாலோ அல்லது நோயை வென்றாலோ, தன் தலையை தானே வெட்டிக் கொண்டு உயிரை மாய்த்துக் கொள்வதாக தெய்வத்திடம் சபதம் செய்யும் செயலாகும்.

## StartupTN

- தமிழ்நாட்டின் தொழில்முனைவோருக்கான ஒருங்கிணைப்பு முகமையான StartupTN – மாநிலத்தின் புத்தொழில் நிறுவனங்களுக்காக ஒரு வாகனம், மின்சார வாகனம் மற்றும் ஸ்மார்ட் மொபிலிட்டி மன்றம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஜூலை 3 அன்று முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமான வழிகாட்டி தமிழ்நாடு மற்றும் பிற பங்குதாரர்களுடன் இணைந்து StartupTN ஆல் இந்த மன்றம் தொடங்கப்பட்டது.
- இந்த பன்முகமை மன்றமானது, முதலீட்டாளர்களுடன் இணைவதற்கும், வழிகாட்டுதலைப் பெறுவதற்கும், கொள்கை அளவிலான ஆதரவில் உதவுவதற்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவும்.

## பூமாலை வணிக வளாகம்

- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின்கீழ் 26 மாவட்டங்களில் மகளிர் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக ரூ.5.16 கோடி செலவில் பூமாலை வணிக வளாகங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அண்மையில் திறந்து வைத்தார்.




- மேலும் அவர் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ், ரூ.50 கோடி செலவில் நானோ நிறுவன நிதியியல் நிதியத்தை (Nano Enterprise Financing Fund) யும் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்தின்கீழ், வங்கிக் கடன்கள் மற்றும் வேலைகள் மற்றும் கிராமப்புற சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளை நகர்ப்புறங்களில் பிரிமியம் விலையில் விற்பனை செய்வதற்கு ஏதுவாக, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் முதன்மை விற்பனை மையங்கள் மற்றும் கூடுதல் விற்பனை மையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

## பசுமைத் தமிழ்நாடு இயக்கம் (Green Tamil Nadu Mission)

- சுற்றுச்சூழல் துறையின்கீழ் செயல்படும் பசுமைத் தமிழ்நாடு இயக்கம் - பெருநகர சென்னை மாநகராட்சியின் ஏழு மண்டலங்களில் பசுமைக் குப்பை இடங்கள் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அர்பசீர் சுமீத் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின்படி, பசுமைத் தமிழ்நாடு இயக்கம், குறிப்பிட்ட இடங்களில் நட்டு வளர்ப்பதற்காக அர்பசீர் சுமீத் நிறுவனத்திற்கு நாட்டு மரக்கன்றுகளை இலவசமாக வழங்கும்.

- ✓ ஜூலை 7ஆம் தேதி கையெழுத்திட்ட இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம், நகர்ப்புறங்களில் பசுமையை அதிகரிப்பது மற்றும் வெப்பத் தீவு விளைவை எதிர்த்துப் போராடுவது ஆகும்.
- ✓ இதன்மூலம் தமிழ்நாட்டில் பசுமைப் பரப்பளவை 23 விழுக்காட்டிலிருந்து 33 விழுக்காடு உயர்ததுவதே இநத முயற்சியின் குறிக்கோள் ஆகும்.

## ➢ பறக்கும் பயிற்சி அமைப்பு (Flying Training Organisation)

- ✓ இந்தியா தனது 36வது மற்றும் தமிழ்நாடு தனது முதலாவது பறக்கும் பயிற்சிப் பள்ளியைப் பெற்றுள்ளன.
- ✓ சமீபத்தில் சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தால், தமிழ்நாட்டின் முதல் பறக்கும் பயிற்சி அமைப்புக்கு சமீபத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டதை அடுத்து, இந்தியாவின் விமானப் போக்குவரத்துக் கல்வி நிலப்பரப்பு, குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- ✓ ஏக்வி (EKVI) விமானப் பயிற்சி நிறுவனம் பிரைவேட் லிட் (Air Training Organization Pvt Ltd), சேலம் விமான நிலையத்தில் இருந்து செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது இந்தப் பிராந்தியத்தில் ஆர்வமுள்ள விமானிகளுக்கு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக உள்ளது.

## ➢ தமிழ்நாட்டின் ஆத்தூர் வெற்றிலைக்கு – புவிசார் குறியீட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது

- ✓ தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மற்றும் நபார்டு மதுரை வேளாண் வணிகக் காப்பீட்டு மன்றம் ஆகியவை தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த ஆத்தூர் வெற்றிலைகளுக்கு புவிசார் குறியீட்டுச் சான்றிதழை வழங்கியுள்ளன.
- ✓ ஆத்தூர் வட்டாரா வெற்றிலை விவசாயிகள் சங்கம் என்ற பெயரில் இந்த சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இந்த புவிசார் குறியீட்டு அங்கீகாரம், ஆத்தூர் வெற்றிலைகளை சந்தைப்படுத்துவதற்கான புதிய வழிகளைத் திறக்கிறது, உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் அவற்றின் சந்தைப்படுத்துதல் திறனை அதிகரிக்கிறது.

## ➢ கலைஞர் நூற்றாண்டு நூலகம்

- ✓ முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவையொட்டி, மதுரை புதுநத்தம் சாலையில் கடந்த ஜூலை 15ஆம் தேதி, கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.





- ரூ.120.75 கோடி செலவில் 2,13,338 சதுர அடியில் 3.5 இலட்சம் புத்தகங்களை உள்ளடக்கிய இந்த ஆறு மாடி நூலகக் கட்டிடம் பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டுள்ளது.
- லண்டன் அருங்காட்சியகத்திற்குப் பிறகு, மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில்தான் 1824 இல் வெளியிடப்பட்ட சதுரகராதியின் (தமிழ் அகராதி) முதல் பதிப்பு உள்ளது. இது பெருமைக்குரிய உண்மைகளில் ஒன்று ஆகும்.

- **வாசிப்பு இயக்கம்**

- மாநில அரசு, ஜூலை 21ஆம் தேதி துறையூர் அருகேயுள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் வாசிப்பு இயக்கத்தைத் தொடங்கியது.



- இந்தப் பிரச்சாரம் பள்ளி மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்க்க முயல்கிறது.
- இந்த நூல்கள், ‘ஒரு கதை, ஒரு புத்தகம் மற்றும் 16 பக்கம்’ என்ற தலைப்பில் நுழை, நட, ஓடு மற்றும் பற என்ற நிலைகளில் பிரிக்கப்பட்டுள்ளன.
- வகுப்பறையில் நூலகங்களை அமைப்பதன்மூலம் மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள உதவுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

- **டைட் டர்னர்ஸ் பிளாஸ்டிக் சவால் (Tide Turners Plastic Challenge)**
  - ✓ ஜூலை27 அன்று மாநில அரசு – பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கத்தில் ‘டைட் டர்னர்ஸ் பிளாஸ்டிக் சவால்’ ஐ தொடங்கியுள்ளது.




  - ✓ இந்த முயற்சிக்காக அரசு, ஐக்கிய நாடுகளில் சுற்றச் சூழல் திட்டத்துடன் இணைந்து செயல்படுகிறது.
  - ✓ இந்தத் திட்டம் தனியார் மற்றும் அரசுப் பள்ளிகளில் சுற்றுச் சூழல் கிளப்புகள் மூலம், நுழைவு, தலைமை மற்றும் சாம்பியன்ஷிப் என்ற மூன்று நிலைகளில் செயல்படுத்தப்படும்.

- **தன்னார்வ தொழில்துறை பசுமை மதிப்பீட்டுப் பொறிமுறை (Voluntary Industrial Green Rating Mechanism)**
  - ✓ தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும், சுற்றுச் சூழல் துறையும் இணைந்து, மாநிலம் முழுவதிலும் உள்ள தொழிற்சாலைகளுக்குத் ‘தன்னார்வத் தொழில் பசுமை மதிப்பீட்டுப் பொறிமுறையை’த் தொடங்கியுள்ளன.
  - ✓ இந்த முன் முயற்சியின் முக்கிய நோக்கம், பசுமை வளர்ச்சியை விரைவுபடுத்துவது மற்றும் பொருளாதார ரீதியாக சாத்தியமான மற்றும் சமூகப் பொறுப்புள்ள வணிகங்களை நோக்கி மாநிலத்தை நகர்த்த உதவுவதேயாகும்.
  - ✓ எரிசக்தி பாதுகாப்பு, நீர்வளங்களைப் பாதுகாத்தல், சுத்தமான காற்று, பசுமை இல்ல வாயு கண்காணிப்பு, நிலையான கழிவு மேலாண்மை மற்றும் தொழிற்சாலைகளின் பசுமை முயற்சிகள் ஆகியவை பசுமை மதிப்பீட்டு செயல்திறனை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு அளவுகோல்கள் ஆகும்.

- **தோழி**
  - ✓ தமிழ்நாடு சமூக நலத்துறை மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறை – பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் பெண்களுக்காக பதினோரு தங்கும் விடுதிகளைத் தொடங்கியுள்ளது.
  - ✓ தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிக் கழகத்தின்கீழ் ‘தோழி’ என்ற இந்த தங்கும் விடுதிகள் செயல்படும்.
  - ✓ சமீபத்தில், மாநிலம் முழுவதிலும் இரண்டு புதிய. ‘தோழி’ தங்கும் விடுதிகளையும், புதுப்பிக்கப்பட்ட ஏழு தங்கும் விடுதிகளையும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

✓




✓ முதலமைச்சரின் கூற்றுப்படி, திராவிடர் இலட்சியவாதியான சி. நடேச முதலியார் பிராமணரல்லாத மாணவர்களுக்காக நடத்திய சுதந்திரத்திற்கு முந்தைய விடுதியான ‘திராவிடர் இல்லம்’ போன்று தமிழக வரலாற்றில் ‘தோழி’ விடுதிகள் நிரந்தர இடத்தைப் பெறும்.

➢ **தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழா (Tamil Nadu International Kite Festival)**

✓ தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழாவின் இரண்டாவது பதிப்பு – ஆகஸ்ட் 12 முதல் 15 வரை மகாபலிபுரத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கடற்காட்சி (TTDC Ocean View) இல் நடைபெறும்.




✓ தமிழ்நாடு சுற்றுலாத் துறையுடன் இணைந்து, குளோபல் மீடியா பாக்ஸ் என்ற நிறுவனம் இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளது.

✓ கடந்த ஆண்டு, இந்த நிகழ்வு 50,000 பார்வையாளர்களை ஈர்த்து மாபெரும் வெற்றி பெற்றது.

✓ இந்த ஆண்டு நிகழ்வின் கருப்பொருள், ‘கடல்வாழ் உயிரினங்களைக் காப்பாற்றுவோம், தாய் பூமியைக் காப்பாற்றுவோம்’ என்பதாகும்.

- **முதல் 1000 சிறந்த ஆரோக்கியமான நாட்கள் திட்டம் (First 1000-Best Healthy Days' Scheme)**

✓ முதல் 1000 நாட்களுக்கு கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பிறந்த குழந்தைகளின் ஊட்டச்சத்தைக் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டு 'முதல் 1000 நாட்கள் சிறந்த ஆரோக்கியமான நாட்கள்' திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

✓ கர்ப்பிணிப் பெண்களுக்கு சாதாரண எடை மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு இரண்டு ஆண்டுகள் வரை போதுமான ஊட்டச்சத்தை உறுதி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

✓ மாநில திட்டக் குழுவின் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ் இந்தத் திட்டத்திற்கு நிதியளிக்கப்படுகிறது. 2022-2024ல் 38.20 கோடி ரூபாய் செலவில் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்கநரகத்தால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

APOLLO STUDY CENTRE

# மாநிலங்கள்

➢ **இறந்தவர் உடல் மரியாதை மசோதா (Honour of Dead Body Bill) -2023**

- ✓ ஜூலை 20 அன்று, ராஜஸ்தான் சட்டசபை – ராஜஸ்தான் இறந்தவர் உடல் மரியாதை மசோதா 2023ஐ நிறைவேற்றியது. இது இறந்த உடலை எதிர்ப்புக் கருவியாகப் பயன்படுத்துவதை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- ✓ குடும்ப உறுப்பினரின் உடலுடன் மக்கள் உள்ளிருப்பு அல்லது போராட்டம் நடத்துவதை இந்த மசோதா தடை செய்கிறது.
- ✓ இந்தச் சட்டத்தை மீறினால் குடும்ப உறுப்பினராயின் இரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். அதே நேரத்தில் குடும்ப உறுப்பினர் அல்லாதவர்களுக்கு ஐந்து மாதங்கள் முதல் ஆறு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்.
- ✓ இறந்த நபரின் குடும்பத்தினர் உடலை ஏற்க மறுத்தால் ஓராண்டு சிறைத் த்ணடனை விதிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

➢ **கேரளாவில் உள்ள அடல் டிங்கரிங் ஆய்வுக்கூடம் (Atal Tinkering Lab in Kerala)**




- ✓ ஓப்போ இந்தியா நிறுவனம் தனது அறிவுக் கூட்டாளியான நித்தி ஆயோக்கின் அட்டல் புதுமை இயக்கத்துடன் இணைந்த கேரளாவில் முதல் பொதுத் துறை தனியார் கூட்டாண்மை மாதிரியான அட்டல் டிங்கரிங் ஆய்வகத்தை அமைத்தது.
- ✓ இந்த முன் முயற்சியின் முதன்மை நோக்கம் எதிர்காலத்திற்கு ஏற்ற ஆற்றல்மிக்க பணியாளர்களை உருவாக்குவதும், இளைஞர்களிடையே தொழில்முனைவு மற்றும் தொழில்நுட்பத் திறன்களை வளர்ப்பதும் ஆகும்.

➢ **இரண்டாவது அதிக காலம் பதவியில் இருந்த முதலமைச்சர்**

- ✓ ஒடிசா முதலமைச்சரும் பிஜு ஜனதா தளம் தலைவருமான நவீன் பட்நாயக் - இந்தியாவில் அதிக காலம் பதவி வகித்த இரண்டாவது முதலமைச்சராக ஆனார்.




- ✓ ஒடிசாவின் முதலமைச்சராக 23 ஆண்டுகள் 139 நாட்களை முடித்த பின்னர் அவர் மேற்கு வங்க முன்னாள் முதலமைச்சர் ஜோதிபாசுவின் சாதனையை முறியடித்தார்.
- ✓ ஜோதிபாசு மேற்கு வங்காளத்தின் முதலமைச்சராக ஜூன் 21, 1977 முதல் நவம்பர் 5, 2000 வரை 23 ஆண்டுகள் 138 நாட்கள் பதவி வகித்தார்.
- ✓ சிக்கிம் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரான பவன் குமார் சாம்லிங், சுதந்திரத்திற்குப் பிறகு அதிக காலம் முதல்வராக இருந்தவர் ஆவார்.

## ➢ கிக் (Gig) தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு

- ✓ ஜூலை 24 அன்று, ராஜஸ்தான் அரசு – கிக் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குவதற்கான சட்டத்தை இயற்றிய நாட்டின் முதல் மாநிலம் ஆனது.



- ✓ பிளாட்ஃபார்ம்களில் வாழ்க்கை நடத்தும் கிக் தொழிலாளர்களுக்கு மாநில அரசிடம் தங்களைப் பதிவு செய்யவும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அணுகவும் மற்றும் பிற விஷயங்களில் ஏதேனும் குறைகளைத் தீர்க்கவும் இந்த மசோதா உரிமைகளை வழங்குகிறது.
- ✓ கிக் தொழிலாளர்கள் என்பவர்கள் பொதுவாக சேவைத் துறையில் பணியாற்றும் அதாவது ஸ்விக்கி அல்லது ஜொமாட்டோ போன்ற ஃப்ரீலான்ஸர்கள் அல்லது தனியான ஒப்பந்ததரார்கள் போன்று தற்காலிக வேலைகளைச் செய்பவர்கள் ஆவர்.

➢ **முதல் திருநங்கை பிறப்புச் சான்றிதழ்**



- ✓ **நூர் ஷெகாவத்,** ராஜஸ்தானில் மூன்றாம் பாலினத்தவராக பதிவு செய்யப்பட்டு பிறப்புச் சான்றிதழ் பெற்ற முதல் திருநங்கை ஆவார்.
- ✓ அவரது பழைய பிறப்புச் சான்றிதழில் அவருடைய பாலினம் ஆண் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.
- ✓ ஷெகாவத்திடம் அவருடைய பிறப்புச் சான்றிதழை நகராட்சி மற்றும் மாநில அரசு அதிகாரிகள் வழங்கினர். அவர் திருநங்கைகளுக்காக ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகிறார். மேலும், அவர் தனது பட்டப்படிப்பை முடிக்க விரும்புகிறார்.

➢ **உலக நகரங்கள் கலாச்சார மன்றத்தில் இணைந்த முதல் இந்திய நகரம்**



- ✓ கர்நாடகாவின் தலைநகரமான பெங்களூரு, உலக நகரங்கள் கலாச்சார மன்றத்தின் (**World Cities Culture Forum**) ஒரு பகுதியாக இருக்கும் முதல் இந்திய நகரமாக மாறியுள்ளது. இந்த மன்றம் எதிர்கால செழிப்பில் கலாச்சாரத்தின் பங்கை ஆராய ஆராய்ச்சி மற்றும் நுண்ணறிவைப் பகிர்ந்து கொள்ளும் நகரங்களின் உலகளாவிய வலையமைப்பாகும்.
- ✓ இந்த மன்றத்தில் இணைந்த 41 வது நகரமாக பெங்களூரு ஆனது. இந்த நெட்வொர்க்கில் தற்போது ஆறு கண்டங்களில் உள்ள 40 நகரங்கள் உள்ளடங்கியுள்ளன. இந்த மன்றத்தில் நியூ யார்க், லண்டன், பாரிஸ், டோக்கியோ மற்றும் துபாய் போன்ற நகரங்கள் உள்ளன.

# தேசிய செய்திகள்

➢ **Report Fish Disease (மீன் நோய்கள் குறித்து புகாரளிக்கவும்)**

✓ ஒன்றிய கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா, சமீபத்தில் ஜுன் 28 அன்று புது தில்லியில் உள்ள கிருஷி பவனில் ‘Report Fish Disease’ என்ற ஒரு மொபைல் செயலியை அறிமுகப்படுத்தினார்.




✓ இந்த செயலி மீன் வளர்ப்பவர்களுக்கு உதவுவதற்காகவும், மீன் வளர்ப்புத் துறையில் நோய் மேலாண்மையை மேம்படுத்துவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ இதன்மூலம் விவசாயிகள், மாவட்ட மீன்வளத்துறை அதிகாரிகள் மற்றும் விஞ்ஞானிகளுடன் நேரடி தொடர்பு கொண்டு மீன் நோய்களை எளிதில் தெரிவிக்கலாம்.

✓ ‘'Report Fish Disease’ என்ற செயலி மீன் விவசாயிகளுக்கு நோய் அறிக்கையை எளிதாக்குகிறது மற்றும் மேம்படுத்துகிறது. நிபுணர்கள் இதில் உடனடியாகத் தலையிட முடியும் என்பதை உறுதி செய்கிறது.

➢ **தேசிய அரிவாள் செல் இரத்த சோகை ஒழிப்புப் பணி (National Sickle Cell Anemia Eradication Mission) 2047**

✓ பிரதமர் நரேந்திர மோடி – ஜுலை 1 அன்று மத்தியப் பிரதேசத்தின் ஷாதோல் மாவட்டத்தில் அமைந்துள்ள லால்பூர் கிராமத்தில் தேசிய அரிவாள் செல் இரத்த சோகை ஒழிப்பு இயக்கம் 2047ஐத் தொடங்கி வைத்தார்.



- ✓ அரிவாள் செல் இரத்த சோகை என்பது பரம்பரை பரம்பரையாக வரும் இரத்தக் கோளாறு ஆகும்.
- ✓ 2047ஆம் ஆண்டிற்குள் அரிவாள் செல் நோயை ஒரு பொது சுகாதார பிரச்சினையாக அகற்றுவதை இந்த இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ நேர வங்கி (Time Bank)

- ✓ நிரோகி பாரத் அறக்கட்டளை என்ற சமூக அமைப்பானது நாட்டிலேயே முதன் முறையாக டேராடூனில் 'நேர வங்கி' ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- ✓ 'நேர வங்கி' கணக்கு வைத்திருப்பவர்கள் முதியவர்களுக்கு உதவ முன்வந்து 'தங்கள் நேரத்தை டெபாசிட்' செய்ய உதவுகிறது. இதற்குப் பதிலாக அவர்களுக்கு உதவி தேவைப்படும்போது அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.
- ✓ இந்த முயற்சி 'ஸ்வீடன் மற்றும் டென்மார்க் போன்ற நாடுகளில் முதலில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டது'.
- ✓ தேவையுள்ள வயதானவர்களுடன் தங்கள் நேரத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்பும் எவரும் காவல்துறை சரிபார்ப்புக்குப் பிறகு நேர வங்கியில் உறுப்பினராகலாம்.

## ➢ டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்பு மசோதா, 2022

- ✓ ஒன்றிய அமைச்சரவை – டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்பு மசோதா, 2022க்கு ஜூலை 5 அன்று ஒப்புதல் அளித்தது.
- ✓ ஜூலை 20ஆம் தேதி தொடங்கும் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் இந்த மசோதா தாக்கல் செய்யப்படும் எனத் தெரிகிறது.
- ✓ இந்த வரைவு டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்பு மசோதா, 2022 இன் நோக்கம், பயனருககுச் சொந்தமான ஆன்லைன் தனிநபர் தரவுகளைப் பாதுகாப்பது மட்டுமே ஆகும்.

## ➢ அக்ஷர் நதி கப்பல்

- ✓ ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறைக்கான அமைச்சர் அமித் ஷா ஜூலை 2 அன்று சபர்மதி ஆற்றங்கரையில் 'அக்ஷர் நதி கப்பல்' என்ற ஒரு கப்பலைத் தொடங்கி வைத்தார்.




- ✓ 15 கோடி ரூபாய் செலவில் 'மேக் இன் இந்தியா' திட்டத்தின்கீழ் நாட்டில் கட்டப்பட்ட முதல் பயணிகள் கட்டுமர கப்பல் இது ஆகும். இதில் 165 பயணிகள் பாதுகாப்பாக பயணிக்க முடியும்.
- ✓ 30 மீட்டர் நீளமுள்ள இந்த சொகுசு கப்பல் இரண்டு எஞ்சின்களைக் கொண்டது. இதை ஓட்டுவதற்கு இரண்டு மணி நேரம் ஆகும். இது குஜராத்தில் சுற்றுலாவை மேம்படுத்த உதவும்.

- **மாநிலங்களில் தீயணைப்பு சேவைகள் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் திட்டம்**

✓ ஒன்றிய உள்துறை அமைச்சகம் - மொத்தம் ரூ.5000 கோடி செலவில் மாநிலங்களில் தீயணைப்பு சேவைகளை விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்குவதற்கான திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

✓ மாநிலங்களில் தீயணைப்பு சேவைகளை வலுப்படுத்துவதற்காக இந்தப் புதிய திட்டம் ஜூலை 5 அன்று தொடங்கப்பட்டது.

✓ உள்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, தேசிய பேரிடர் மீட்பு நிதியத்தின் (National Disaster Response Fund) கார்பஸில் இருந்து தீயணைப்பு சேவைகளை முன்னுரிமை அடிப்படையில் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்குவதற்காக ரூ.5000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

- **வன (பாதுகாப்பு) திருத்த மசோதா, (The Forest (Conservation) Amendment Bill) 2023**




✓ வன (பாதுகாப்பு) சட்டத் திருத்த மசோதா, 2023க்கு நாடாளுமன்றக் குழு ஆட்சேபனையின்றி அனுமதி அளித்துள்ளது.

✓ இந்த மசோதா வனப் பாதுகாப்புச் சட்டம் 1980இல் திருத்தங்களை முன்மொழிகிறது மற்றும் சில வன நிலங்களுக்கு சட்டப் பாதுகாப்பிலிருந்து விலக்கு அளிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

✓ இந்த மசோதா நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- **சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் (Mines and Minerals (Development & Regulation) Act), 1957**

✓ ஜூலை 12 அன்று, ஒன்றிய அரசு – சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957இல் திருத்தங்களை அனுமதித்தது.

✓ இந்த மசோதா லித்தியம், பெரிலியம், நியோபியம், டான்டலம், டைட்டானியம் மற்றும் சிர்கோனியம் ஆகிய ஆறு முக்கிய கனிமங்களையும், தங்கம், வெள்ளி மற்றும் தாமிரம் போன்ற ஆழமான தாதுக்களையும் தனியார் நிறுவனங்கள் வணிக ரீதியாக சுரங்கப்படுத்த அனுமதிக்கும்.

✓ தற்போது, தனியார் நிறுவனங்கள் இந்த முக்கியமான கனிமங்களை வணிக ரீதியாக தோண்டி எடுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

✓ ஆய்வு மற்றும் சுரங்க நடவடிக்கைகளில் அரசு நிறுவனங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டன.

- **PBW RS1**
- ✓ லூதியானாவில் அமைந்துள்ள பஞ்சாப் வேளாண் பல்கலைக் கழகம் - PBW RS1 என்ற ஒரு புதிய கோதுமை வகையை உருவாக்கியுள்ளது.




- ✓ PBW RS1 ஆனது மற்ற கோதுமை வகைகளைப் போலவே மொத்த ஸ்டார்ச் உள்ளடக்கத்தையும் கொண்டுள்ளது. ஆனால் குறிப்பிடத்தக்க அளவு அதிக எதிர்ப்புத் திறன் கொண்ட ஸ்டார்ச் உள்ளடக்கம் மற்றும் அமிலோஸ் உள்ளடக்கம் உள்ளது.
- ✓ உடல் பருமன் மற்றும் வகை 2 நீரிழிவு போன்ற உணவு தொடர்பான நோய்களின் பரவலைக் குறைப்பதற்கு எதிர்ப்புத் திறன் கொண்ட மாவுச் சத்து உதவுகிறது.

- **பாரத் பருப்பு (Bharat Dal)**
- ✓ பியூஸ் கோயல் 'பாரத் பருப்பு' திட்டத்தின்கீழ், மானிய விலையில் சனா பருப்பு விற்பனையைத் தொடங்கினார்.
- ✓ விலைவாசி உயர்வில் இருந்து நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், 'பாரத் பருப்பு' என்ற பெயரில், மானிய விலையில் சனா பருப்பை விற்பனை செய்யும் அறிவிப்பை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது.
- ✓ இந்தப் பருப்பின் 1 கிலோ மூட்டை கிலோ ரூ.60க்கும், 30 கிலோ மூட்டை கிலோ ரூ.55க்கும் கிடைக்கும்.
- தில்லி தலைநகர் பிராந்தியத்தில் உள்ள தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப் படுத்துதல் கூட்டமைப்பின் சில்லறை விற்பனை நிலையங்கள் சனா பருப்பை விற்பனை செய்கின்றன.

- **பாரத் பருப்பு**
- ✓ விலைவாசி உயர்வில் இருந்து நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், 'பாரத் பருப்பு' என்ற பெயரில், மானிய விலையில் சனா பருப்பை விற்பனை செய்வதாக, சமீபத்தில் ஒன்றிய அரசு அறிவித்தது.




- ✓ ஒன்றிய உள்துறை அமைச்சர் பியூஷ் கோயல், ‘பாரத் பருப்பு’ என்ற பிராண்ட் பெயரில் ‘மானியம்’ பெற்ற சனா பருப்பு விற்பனையை ஜூலை 17ஆம் தேதி தொடங்கி வைத்தார்.
- ✓ இந்தப் பருப்பு ஒரு கிலோ மூட்டை கிலோ ரூ.60க்கும், 30 கிலோ மூட்டை கிலோ ரூ.55க்கும் கிடைக்கும்.
- ✓ இந்த ஏற்பாட்டின்கீழ், சனா பருப்பானது, மாநில அரசுகளின் நலத் திட்டங்களின்கீழ் வழங்குவதற்கும் கிடைக்கிறது.

## ➢ AI for India (இந்தியாவுக்கான செயற்கை நுண்ணறிவு) 2.0

- ✓ ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் - செயற்கை நுண்ணறிவை மையமாகக் கொண்ட இலவச ஆன்லைன் பயிற்சித் திட்டமான AI for India 2.0 ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.



- ✓ இந்தத் திட்டம் சமீபத்தில் உலக இளைஞர் திறன் தினமான ஜூலை 15 அன்று தொடங்கப்பட்டது.
- ✓ இந்த ஆன்லைன் திட்டமானது தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில் (National Council for Vocational Education and Training) மற்றும் ஐஐடி மெட்ராஸ் ஆகியவற்றின் அங்கீகாரங்களைப் பெற்றுள்ளது. இது இளம் நபர்களை அதிநவீன திறன்களுடன் தயார்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ நூலகங்களின் திருவிழா 2023

- ✓ ஆகஸ்ட் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் புதுதில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் நடைபெறும் இரண்டு நாள் நிகழ்வான ‘நூலகங்களின் திருவிழா 2023’ ஐ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தொடங்கி வைக்கிறார்.




- ✓ நிஜ மற்றும் மின்னணு நூலகங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் இந்தத் திருவிழா, ஒன்றிய கலாச்சார அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ இந்தியாவில் உள்ள நூலகங்களின் நவீனமயமாக்கல் மற்றும் டிஜிட்டல்மயமாக்கலில் கவனம் செலுத்தும் வகையில். உலகெங்கிலும் உள்ள சின்னச் சின்ன நூலகங்களையும் இந்த விழா சிறப்பிக்கும். இந்த விழாவில் நான்கு மண்டலங்கள் அல்லது 'வரைதல் அறைகள்' இருக்கும் - அவை புத்தக அமர்வுகள், டிஜிட்டல் காட்சிகள், பாட்காஸ்ட்கள் மற்றும் மனித நூலகத் திட்டம் ஆகும்.

## ➢ விலை நிலைப்படுத்துதல் நிதியம் (Price Stabilisation Fund)

- ✓ ஒன்றிய அரசு – விலை நிலைப்படுத்துதல் நிதியம் மூலம் தக்காளி கொள்முதலைத் தொடங்கியுள்ளது.
- ✓ தற்போது ஏற்பட்டுள்ள தக்காளி விலை உயர்வை சமாளிக்கவும், பொதுமக்களுக்கு கட்டுப்படியாகும் விலையை உறுதி செய்யவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்த விலை நிலைப்படுத்துதல் நிதியம் 2014-15 நிதியாண்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் அதிக விலை ஏற்ற இறக்கங்களை உள்வாங்கவும் குறைப்பதற்காகவும் அமைக்கப்பட்டது.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், பண்ணை வாயில் அல்லது சந்தைகளில், நேரடியாக விவசாயிகள் அல்லது விவசாய அமைப்புகளிடமிருந்து பொருட்கள் நேரடியாக கொள்முதல் செய்யப்படுகின்றன.

## ➢ டெல்லி தேசிய தலைநகர் பிராந்திய (திருத்த) மசோதா (National Capital Territory of Delhi (Amendment) Bill), 2023

- ✓ ஜூலை 25 அன்று, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அமைச்சரவை – டெல்லி தேசிய தலைநகர் பிராந்திர (திருத்த) மசோதா, 2023க்கு ஒப்புதல் அளித்தது.
- ✓ இந்த மசோதா தேசியத் தலைநகரின் அதிகாரத்துவ இயந்திரத்தின் கட்டுப்பாட்டை ஒன்றிய அரசிடம் ஒப்படைக்க முயல்கிறது.
- ✓ மே 19 அன்று, குடியரசுத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்ட டெல்லி தேசிய தலைநகர் பிராந்திய (திருத்த) அவசரச் சட்டத்திற்கு மாற்றாக இந்தச் சட்டம் கொண்டு வரப்படும்.
- ✓ அந்த அவசரச் சட்டத்திற்கப் பதிலாக தற்போது நடைபெற்று வரும் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் இந்த மசோதா தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ➢ அரசியலமைப்பு (பட்டியலின பழங்குடியினர்) ஆணை (ஐந்தாவது திருத்தம்) மசோதா, (Constitution (Scheduled Tribes) Order (Fifth Amendment) Bill), 2022

- ✓ ஜூலை 25 அன்று, மாநிலங்களவை – அரசியலமைப்பு (பட்டியலின பழங்குடியினர்) ஆணை (ஐந்தாவது திருத்த) மசோதா, 2022ஐ நிறைவேற்றியது.
- ✓ இந்த மசோதா சத்தீஸ்கரின் தனுஹர், தனுவர், கிசான். சௌன்ரா, சான்ரா மற்றும் பிஞ்சியா சமூகங்களை பட்டியலின பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இது டிசம்பர் மாதத்தில் குரல் குறிப்பு மூலம் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

## ➢ உயிரியல் பன்முகத் தன்மை (திருத்த) மசோதா (The Biological Diversity (Amendment) Bill) 2022 மற்றும் பல மாநில கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) மசோதா, (Multi-State Co-operative Societies (Amendment) Bill) 2022

- ✓ ஜூலை 25 அன்று, மக்களவை – உயிரியல் பன்முகத் தன்மை (திருத்த) மசோதா 2022 மற்றும் பல மாநில கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) மசோதா, 2022 ஆகிய இரண்டு மசோதாக்களை நிறைவேற்றியது.
- ✓ உயிரியல் பன்முகத் தன்மை (திருத்த) மசோதா, 2021 இந்திய மருத்து முறைகளை வணிகமயமாக்குவதையும், காட்டு மருத்துவ தாவரங்களை வளர்ப்பதையும் மற்றும் இந்தத் துறையில் வெளிநாட்டு முதலீட்டையும் ஊக்குவிக்க முயல்கிறது.

## ➢ ஐடிசியின் ‘மிஷன் மில்லட்ஸ்’ முயற்சி (ITC's ‘Mission Millets’ Initiative)

- ✓ ஜூலை 25 அன்று, இந்தியாவின் முன்னணி மல்டி பிசினஸ் நிறுவனங்களில் ஒன்றான ஐடிசி லிமிடெட் - புது தில்லியில், தபால் துறை, தகவல் தொடர்பு அமைச்சகத்துடன் இணைந்து, தினைகள் பற்றிய சிறப்பு தபால் தலையை வெளியிட்டது.



- ✓ சர்வதேச தினை ஆண்டை நினைவு கூறும் வகையில் ஐடிசியின் ‘மிஷன் மில்லட்ஸ்’ முயற்சியின் ஒரு பகுதியாக பிரத்யேக அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.
- ✓ இந்த வெளியீடு ஸ்ரீஅன்னை மற்றும் தினை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நாடு தழுவிய முயற்சிகளைக் கொண்டாடுகிறது.

## ➢ ஆயுஷ்மான் பவ் (Ayushman Bhav)

- ✓ ஒன்றிய சுகாதார அமைச்சகம் - அரசு நடத்தும் அனைத்து சுகாதாரத் திட்டங்களும் ஒவ்வொரு பயனாளிக்கும் சிறந்த முறையில் சென்றடைவதை உறுதி செய்வதற்காக, ‘ஆயுஷ்மான் பவ்’ திட்டத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

- ✓ ஆயுஷ்மான் பவ் திட்டத்தின் அடுத்த தூண் - ஆயுஷ்மான் மேளா – ஆயுஷ்மான் பாரத் உடல்நலம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் அளவில் நடைபெறும்.
- ✓ அதன் ஒரு பகுதியாக, சமூக நல மைய அளவில் மருத்துவக் கல்லூரிகளிலும் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

## ➢ தேசிய செவிலியர் மற்றும் மருத்துவச்சி ஆணைய மசோதா (National Nursing and Midwifery Commission Bill), 2023 மற்றும் தேசிய பல் மருத்துவ ஆணைய மசோதா (National Dental Commission Bill), 2023

- ✓ ஜூலை 24 அன்று ஒன்றிய அரசு – தேசிய செவிலியர் மற்றும் மருத்துவச்சி ஆணைய மசோதா, 2023 மற்றும் தேசிய பல் மருத்துவ ஆணைய மசோதா, 2023 ஆகிய இரண்டு சுகாதார மசோதாக்களை மக்களவையில் அறிமுகப்படுத்தியது.
- ✓ தேசிய பல் மருத்துவ ஆணைய மசோதா, பல் மருத்துவர்கள் சட்டம், 1948ஐ ரத்து செய்ய முயல்கிறது மற்றும் நாட்டில் பல் கல்வி மற்றும் தொழிலை ஒழுங்குபடுத்த தேசிய பல் மருத்துவ ஆணையத்தை அமைக்க முன்மொழிகிறது.
- ✓ தேசிய செவிலியர் மற்றும் மருத்துவச்சி ஆணைய மசோதா, 2023 தேசிய செவிலியர் மற்றும் மருத்துவச்சி ஆணையத்தை அமைப்பதையும், இந்திய நர்சிங் கவுன்சில் சட்டம், 1947ஐ ரத்து செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ பிறப்பு மற்றும் இறப்பு பதிவு (திருத்த) மசோதா, 2023

- ✓ பொது மக்களின் நலுன்காக டிஜிட்டல் பதிவு மற்றும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை மின்னணு முறையில் வழங்குவதற்கான ஏற்பாடுகளை இந்த மசோதா உள்ளடக்குகிறது.
- ✓ இந்த மசோதா பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம், 1969 (1969இன் 18) ஐ திருத்துகிறது. இது பிறப்பு மற்றும் இறப்புகளை பதிவு செய்வதற்கான செயல்முறைகளை ஒழுங்குபடுத்துகிறது.
- ✓ பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்புகளுக்கான தேசிய மற்றும் மாநில அளவிலான தரவுத் தளங்களை உருவாக்குவது இந்த மசோதாவின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

## ➢ வனப் பாதுகாப்பு (திருத்த) மசோதா, 2023

- ✓ இந்த மசோதா அசல் வன பாதுகாப்பு சட்டம், 1980இல் பல முக்கியமான மாற்றங்களை அறிமுகப்படுத்துகிறது.
- ✓ நாட்டின் எல்லையில் 100 கிமீ-க்குள் உள்ள நிலங்களுக்கு பாதுகாப்புச் சட்டங்களின் வரம்பிலிருந்து விலக்கு அளிக்கவும், வனப்பகுதிகளில் உயிரியல் பூங்காக்கள், ச∴பாரிகள் மற்றும் சுற்றுச் சூழல் சுற்றுலா வசதிகளை அமைக்கவும் இந்த மசோதா அனுமதியளிக்கிறது.
- ✓ மேலும், வயர்லெஸ் தகவல் தொடர்பு, வேலிகள், பாலங்கள், கல்வெட்டுகள் மற்றும் பல்வேறு வசதிகள் போன்ற வனமற்ற நடவடிக்கைகளுக்கு வனநிலத்தைப் பயன்படுத்த இந்தத் திருத்தம் அனுமதிக்கிறது.

## ➢ ஒளிப்பதிவு (திருத்த) சட்டம் (Cinematograph (Amendment) Act)

- ✓ திரைப்படத் திருட்டைச் சமாளிக்கவும். மத்திய திரைப்படச் சான்றளிப்பு வாரியம் வழங்கிய வயது அடிப்படையிலான சான்றிதழை மாற்றியமைக்கவும், மற்றும் தளங்களில் திரைப்படங்கள் மற்றும் பொருட்களை வகைப்படுத்துவதில் நிலைத்தன்மையை ஏற்படுத்தவும் இந்த மசோதா திட்டமிட்டுள்ளது.

- ✓ ஒரு திரைப்படத்தின் திருட்டு நகல்களை எடுபபவர்களுக்கு மூன்று வருட சிறைத் தண்டனையையும், அதன் தயாரிப்பு செலவில் 5 விழுக்காடு வரை அபராதமும் விதிக்க இந்த மசோதா வகை செய்கிறது.
- ✓ இந்த திருத்தப்பட்ட சினிமாட்டோகிரா∴ப் (திருத்த) சட்டம், சினிமாட்டோகிரா∴ப் சட்டம், 1952ஐ திருத்த முற்படுகிறது.

### ➢ மேரி மதி மேரா தேஷ் (Meri Mati Mera Desh)

- ✓ நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த வீர வீரர்களைக் கவுரவிக்கும் வகையில் 'மேரி மதி மேரா தேஷ்' என்ற பிரச்சாரத்தை பிரதமர் அறிவித்தார். அவர்களின் நினைவாக பஞ்சாயத்துகளின் சிறப்பு கல்வெட்டுகள் நிறுவப்படும்.
- ✓ இந்தப் பிரச்சாரத்தின்கீழ். 'அமிர்த கலச யாத்திரை' ஏற்பாடு செய்யப்பட்டு. நாட்டின் பல்வேறு மூலைகளில் இருந்தும் 7500 பானைகளில் மரக்கன்றுகளுடன் மண்ணை ஏற்றி தேசிய தலைநகருக்குக் கொண்டு வரப்படும்.
- ✓ பின்னர் தேசிய போர் நினைவகத்துக்கு அருகில் உள்ள இந்த 'கலசங்களில்' கொண்டு செல்லப்படும் மண் மற்றும் செடிகளில் இருந்து 'அமிர்த வாடிகா' தயாரிக்கப்படும்.

APOLLO STUDY CENTRE

# திட்டங்கள்

➢ **பெண்களுக்கான புதிய ஸ்வர்ணிமா (Swarnima) திட்டம்**

✓ ஸ்வர்ணிமா திட்டம் என்பது சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு காலக் கடன் திட்டமாகும். இது பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த பெண் தொழில் முனைவோருக்கு நிதியுதவி அளிக்கும்.

✓ காலக்கடன்கள் வழங்கி சமூக மற்றும் நிதிப் பாதுகாப்பை வழங்குவதன்மூலம் பெண்களுக்கு அதிகாரமளிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்தத் திட்டம் ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் 2,00,000 வரையிலான கடன்களைப் பெற உதவுகிறது.

➢ **சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவ திட்டம்**

✓ மாநிலத்தில் சிறுநீரகக் கோளாறுகளைத் தடுப்பதற்காக, ‘சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவ திட்டம்’ என்ற ஒரு திட்டத்தை மாநில சுகாதாரத் துறை ஜூலை 10ஆம் தேதி மாநிலம் தழுவிய அளவில் தொடங்கி வைத்துள்ளது.




✓ சிறுநீரக நோய்களை முன்கூட்டியே கண்டறிவதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் பல பரிசோதனைகளை மேற்கொள்வதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ நீரிழிவு நோயாளிகள், உயர் இரத்த அழுத்தம் மற்றும் சிறுநீரக நோயின் குடும்ப வரலாறு உட்பட அதிக ஆபத்துள்ள நபர்களைக் கண்டறிந்து இறுதி நிலை சிறுநீரக நோயைத் தடுப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

➢ **அம்ரித் பாரத் நிலையத் திட்டம் (Amrit Bharat Station Scheme)**



✓ அம்ரித் பாரத் நிலையம் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்வதற்காக 90 நிலையங்களை அடையாளம் கண்டு, இரயில் நிலையங்களில் வசதிகளை மேம்படுத்துவதற்கு தெற்கு இரயில்வே குறிப்பிடத்தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

- ✓ இந்தத் திட்டமானது இந்த நிலையங்களுக்கான மாஸ்டர் பிளான்களைத் தயாரித்து படிப்படியாக செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

➢ **கால்நடைத் துறைக்கான 'கடன் உத்தரவாதத் திட்டம்'**

- ✓ குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்களை மேம்படுத்துவதன்மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக கால்நடைத் துறைக்கான 'கடன் உத்தரவாதத் திட்டம்' முதன் முதலாகத் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.




- ✓ இந்திய அரசு, கிராமப்புற பொருளாதாரத்திற்கு புத்துயிர் அளிப்பதற்காக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு, கால்நடைத் துறைக்கு ஒரு முன்னோடியான 'கடன் உத்தரவாதத் திட்டத்தை' அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை, தகுதிவாய்ந்த கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாதக் காப்பீட்டை வழங்குவதற்காக ரூ.750 கோடியில் கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளையை நிறுவியுள்ளது. இது கால்நடைத் துறையின் பின்தங்கிய பிரிவுகளுக்கு மேம்பட்ட நிதி அணுகலை வழங்குகிறது.

# நீதிமன்றத் தீர்ப்புகள்

➢ **மூத்த வழக்கறிஞர்களின் பதவிக்கான வழிகாட்டுதல்கள் - இந்திய உச்ச நீதி மன்றம்**

- ✓ உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களை மூத்த வழக்கறிஞர்களாக நியமிப்பது தொடர்பான புதிய வழிகாட்டுதல்களை உச்ச நீதி மன்றம் வெளியிட்டுள்ளது.
- ✓ 'இந்திய உச்ச நீதிமன்றத்தால் மூத்த வழக்கறிஞர்களை நியமனம் செய்வதற்கான வழிகாட்டுதல்கள், 2023' என்ற தலைப்பில் வழங்கப்பட்டுள்ள இந்த புதிய தகுதி அளவுகோல்கள் மற்றும் விதிகள் 2018இல் வெளியிடப்பட்ட முந்தைய வழிகாட்டுதல்களுக்குப் பதிலாக இருக்கும்.
- ✓ புதிய வழிகாட்டுதல்களின்படி, தகுதிக்கான அளவுகோல்கள் மற்றும் மதிப்பெண்களின் வெயிட்டேஜ் ஆகியவை, பல ஆண்டுகள் பயிற்சி, தீர்ப்புகளுக்கான பங்களிப்பு, சட்ட வெளியீடுகள் மற்றும் கற்பித்தல் பணிகள் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

# சர்வதேச செய்திகள்

➢ **பிளாஸ்டிக் பைகளைத் தடை செய்த முதல் நாடு**

✓ பழங்கள் மற்றும் காய்கறிகள் வாங்குவதற்கு பல்பொருள் அங்காடிகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மெல்லிய பிளாஸ்டிக் பைகளுக்கு முழுமையான தடையை அமல்படுத்திய முதல் நாடாக விளங்குவதன்மூலம் பிளாஸ்டிக் கழிவுகளைக் குறைப்பதற்கான ஒரு முக்கிய படியை நியூசிலாந்து அரசு எடுத்துள்ளது.

✓ இந்தக் குறிப்பிடத்தக்க நடவடிக்கையானது, 2019ஆம் ஆண்டு தடிமனான பிளாஸ்டிக் ஷாப்பிங் பைகளை தடை செய்ததன்மூலம் தொடங்கப்பட்ட ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கிற்கு எதிரான அரசாங்கத்தின் தற்போதைய பிரச்சாரத்துடன் இணைந்து கொள்கிறது.

➢ **உலகளாவிய நெருக்கடி பதில் குழு (Global Crisis Response Group)**

✓ குளோபல் கிரைசிஸ் ரெஸ்பான்ஸ் குழுமத்தின் சாம்பியன்ஸ் குழுவில் இந்தியா இணைகிறது.




✓ ஐ.நா பொதுச் செயலாளரின் அழைப்பின்பேரில் இந்தியா உலகளாவிய நெருக்கடி பதில் குழுவின் சாம்பியன்ஸ் குழுவில் இணைந்துள்ளது.

✓ உணவுப் பாதுகாப்பு, எரிசக்தி மற்றும் நிதி ஆகியவற்றில் அவசர உலகளாவிய பிரச்சினைகளைத் தீர்க்கவும், உலகளாவிய பதிலை ஒருங்கிணைப்பதற்காகவும் மார்ச் 2022இல் இந்த உலகளாவிய நெருக்கடி பதில் குழு நிறுவப்பட்டது.

➢ **34வது சர்வதேச உயிரியல் ஒலிம்பியாட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது**



✓ ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக, ஜூலை 2-11 வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அல் ஜனில் நடைபெற்ற 34வது சர்வதேச உயிரியல் ஒலிம்பியாட் போட்டியல் இந்தியா ஒட்டு மொத்த வெற்றியாளராக உருவெடுத்துள்ளது.

- ✓ இதுவரை இல்லாத நிலையாக இந்திய மாணவர் அணி, தங்கப் பதக்கத்தைவென்று, முதல் முறையாக பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

## ➢ பாஸ்டில் நாள் இராணுவ அணி வகுப்பு (Bastille Day Military Parade)

- ✓ ஜூலை 14 அன்று நடைபெறவுள்ள பிரான்சின் பாஸ்டில் தின கொண்டாட்டத்திற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார்.
- ✓ பாஸ்டில் தின இராணுவ அணிவகுப்பு, பிரான்சிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான மூலோபாய கூட்டணியை வலுப்படுத்தி, இந்தியப் படைகளின் பங்கேற்புக்கு சாட்சியாக இருக்கும்.

## ➢ சாட்போட் 'பார்ட்' (Chatbot 'Bard)

- ✓ கூகுளின் செயற்கை நுண்ணறிவு சாட்போட் 'பார்ட்' – பல புதிய அம்சங்களுடன் ஒன்பது இந்திய மொழிகள் உட்பட 40க்கும் மேற்பட்ட மொழிகளுக்கான ஆதரவைச் சேர்த்துள்ளது.




- ✓ கூகுள், பிரேசில் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் முழுவதிலும் 59 புதிய நாடுகள் மற்றும் பிரதேசங்களுக்கு இந்த 'பார்டை' விரிவுபடுத்துகிறது.
- ✓ இந்த விரிவாக்கத்துடன், பார்ட் இப்போது உலகின் பெரும்பாலான பகுதிகளிலும், அதிகம் பேசப்படும் மொழிகளிலும் கிடைக்கிறது என்று தேடுதல் பொறி நிறுவனர் தெரிவித்துள்ளார்.

## ➢ கருங்கடல் தானிய முயற்சி (Black Sea Grain Initiative)

- ✓ ஜூலை 17 அன்று, கருங்கடல் வழியாக உக்ரைன் தானியங்களை ஏற்றுமதி செய்யும் ஐ.நா. தரகு ஒப்பந்தத்தில் பங்கேற்பதை ரஷ்யா நிறுத்தியது.




- ✓ கருங்கடல் தானிய முயற்சி என்றும் அறியப்படும் இந்த ஒப்பந்தம் பல மாதங்களாக மீண்டும் மீண்டும் நீட்டிக்கப்பட்டது. ஆனால் இப்போது இந்த ஒப்பந்தம் ஜூலையில் காலாவதியாக வேண்டும் என்றும் ரஷ்யா விரும்புகிறது.

- ✓ உக்ரைன் தனது தானியங்களை ஏற்றுமதி செய்வதற்கு உள்ள ஒரே கடல்வழி வாய்ப்பாக கருங்கடல் விளங்குகிறது.
- ✓ கடந்த ஆண்டு ஜூலை 27 அன்று ஐ.நா மற்றும் துருக்கியின் தரகுக்குப் பிறகு உலகளாவிய உணவு அவசரநிலையைத் தடுக்க தானிய ஒப்பந்தம் தொடங்கப்பட்டது.
- ✓ உலக உணவுத் திட்டத்தின்படி, உலக அளவில் 400 மில்லியன் மக்களுக்கு உணவளிக்கும் உலகின் மிகப்பெரிய தானிய விநியோகஸ்தர்களில் ஒன்றாக உக்ரைன் விளங்குகிறது.


## ➢ இந்தியா – மியான்மர் - தாய்லாந்து முத்தரப்பு நெடுஞ்சாலைத் திட்டம்




- ✓ இந்தியா – மியான்மர் - தாய்லாந்து நெடுஞ்சாலை என்பது இந்தியா, மியான்மர் மற்றும் தாய்லாந்து இடையே சாலை இணைப்பை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க பிராந்திய இணைப்புத் திட்டமாகும்.
- ✓ இந்த நெடுஞ்சாலையின் மொத்த நீளம் தோராயமாக 1360 கிமீ (845 மைல்கள்) ஆகும். இது இந்தியாவின் மணிப்பூரில் உள்ள மோரேயில் தொடங்கி மியான்மர் வழியாகச் சென்று தாய்லாந்தின் மே சோட்டில் முடிவடைகிறது.

## ➢ ட்விட்டர் - லோகோ

- ✓ ட்விட்டர் நிறுவனம் - அதன் சின்னமான நீலப் பறவை சின்னத்திற்குப் பதிலாக புதிய ‘எக்ஸ்’ லோகோவுக்கு மாற்றுவதன்மூலம் ஒரு பெரிய மாற்றத்தை அறிவித்துள்ளது.



- ✓ ட்விட்டர் நிறுவன தலைமை நிர்வாக அலுவலராகிய எலோன் மாஸ்க், இந்த லோகோ மாற்றத்தை அறிவித்து, புதிய லோகோவுடன் நிறுவனத் தலைமையகத்தின் புகைப்படத்தைப் பகிர்ந்துள்ளார்.
- ✓ இந்த நிறுவனம் தற்போது எக்ஸ் கார்ப் நிறுவனத்துடன் இணைகிறது. இது அனைத்தையும் உள்ளடக்கிய ‘எவ்ரிதிங் - ஆப்’ உருவாக்கும் மஸ்க்கின் திட்டத்துடன் ஒத்துப் போகிறது.

- ✓ 'எக்ஸ்' லோகோ ட்விட்டருக்கான புதிய அத்தியாயத்தைப் பிரதிபலிக்கிறது. இது வளர்ச்சி மற்றும் சாத்தியக் கூறுகளின் புதிய சகாப்தத்தைக் குறிக்கிறது.

## ➢ பாஸ்மதி அல்லாத வெள்ளை அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்துள்ளது:

- ✓ வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, உலகின் முதன்மையான அரிசி ஏற்றுமதியாளராகிய இந்தியா, உள்நாட்டு விலையை கட்டுப்பாட்டில வைப்பதற்காக, 'பாசுமதி அல்லாத வெள்ளை அரிசி'யின் அனைத்து ஏற்றுமதிகளுக்கும் தடை விதித்துள்ளது.



- ✓ இருப்பினும், மற்ற நாடுகளின் கோரிக்கையின்பேரில், அவர்களின் உணவுப் பாதுகாப்புத் தேவைகள் மற்றும் அவர்களின் அரசின் முறையான ஒப்புதலுக்குட்பட்டு, வெள்ளை அரிசியை ஏற்றுமதி செய்ய அரசு அனுமதியளிக்கும்.
- ✓ 'இந்திய சந்தையில் பாஸ்மதி அல்லாத வெள்ளை அரிசி போதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்வதற்காகவும், நாட்டிற்குள் விலை உயர்வைக் குறைப்பதற்காகவும்' மட்டுமே ஏற்றுமதிக்குத் தடைவிதித்துள்ளதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

## ➢ இந்தியா சர்வதேச பெரிய பூனை (Big Cat) கூட்டணியை அறிமுகப்படுத்தியுள்ளது




- ✓ பூமியில் உள்ள ஏழு பெரிய பூனை இனங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இந்தியா சமீபத்தில் சர்வதேச பெரிய பூனை கூட்டணியை தொடங்கியுள்ளது.
- ✓ புலிகள் திட்டத்தின் வெற்றியால் ஈர்க்கப்பட்டு, உலகப் புலிகளில் 70 விழுக்காட்டிற்குப் பங்களித்த இந்த இந்தியா சர்வதேச பெரிய கூட்டணி, புலி, சிங்கம், சிறுத்தை, பனிச் சிறுத்தை, பூமா. ஜாகுவார் மற்றும் சீத்தா உள்ளிட்ட முக்கிய பெரிய பூனை இனங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும்.

# இந்தியா மற்றும் இதர நாடுகள்

➢ **வங்காளதேசம் மற்றும் இந்தியா ரூபாய்களில் வர்த்தக பரிவர்த்தனைகளைத் தொடங்குகின்றன**




✓ வங்காளதேசமும் இந்தியாவும் அமெரிக்க டாலரை நம்புவதைக் குறைத்து, பிராந்திய நாணயம் மற்றும் வர்த்தகத்தை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, ரூபாயில் வர்த்தகப் பரிவர்த்தனைகளைத் தொடங்கியுள்ளன.

✓ இந்த இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் வங்காளதேசத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக விளங்குகிறது. இது ஒரு வெளிநாட்டுடனான வர்த்தக பரிவர்த்தனைக்கு அமெரிக்க டாலர் அல்லாத நாணயத்தைப் பயன்படுத்துகிறது.

✓ இந்த நடவடிக்கை இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் இடையிலான வளர்ச்சி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பைக் குறிக்கிறது, பரஸ்பர நன்மைகளை வளர்க்கிறது.

➢ **இந்தியா – தான்சானியா பாதுகாப்பு ஒத்துழைப்பு**

✓ சமீபத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தான்சானியா சென்றிருந்தபோது, இந்தியா மற்றும் தான்சானியா இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பின் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

✓ இந்த ஈடுபாடுகள், பிரதமர் நரேந்திர மோடியின் சாகர் (பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி) கோட்பாட்டிற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகின்றன.

✓ இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக, தான்சானியாவில் உள்ள சான்சிபார் மற்றும் டார் எஸ் சலாம் துறைமுகங்களுக்கு வழிகாட்டப்பட்ட ஏவுகணை போர்க் கப்பல் ஐஎன்எஸ் திரிசூல் சென்றது.

➢ **செமிகண்டக்டர் சுற்றுச் சூழல் அமைப்பு**

✓ இந்தியாவும் ஜப்பானும் குறைக்கடத்தி வடிவமைப்பு, உற்பத்தி, உபகரணங்கள் ஆராய்ச்சி, திறமை மேம்பாடு மற்றும் குறைக்கடத்தி வநியோகச் சங்கிலியில் சமநிலையைக் கொண்டு வருவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

✓ இதன்மூலம் குறைக்கடத்தி சுற்றுச் சூழல் அமைப்பின் கூட்டு மேம்பாட்டிற்காக இந்தியாவுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட, அமெரிக்காவுக்கு அடுத்த இரண்டாவது குவாட் பங்காளியாக ஜப்பான் மாறியுள்ளது.



- இந்த நாடுகள் அரசுக்கும் அரசுக்கும், தொழில்துறைக்கும் தொழில்துறைக்கும் ஒத்துழைக்கும் ஒரு ‘செயல்படுத்தும் அமைப்பை’ உருவாக்கும்.
- சுமார் 100 குறைக்கடத்தி உற்பத்தி ஆலைகளுடன், ஜப்பான் குறைக்கடத்தி சுற்றுச் சூழல் அமைப்பைக் கொண்ட முதல் ஐந்து நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது.

APOLLO STUDY CENTRE

# மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள்

➢ **பசுமை ஹைட்ரஜன் பற்றிய சர்வதேச மாநாடு (International Conference on Green Hydrogen) - 2023**

✓ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் - பசுமை ஹைட்ரஜன் பற்றிய சர்வதேச மாநாடு 2023ஐ ஜூலை 5 முதல் 7 வரை புதுதில்லியில் விஞ்ஞான் பவனில் நடத்தவுள்ளது.




✓ நாட்டில் பசுமை ஹைட்ரஜன் குறித்த இந்த அளவிலான மாநாடு நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

✓ ஒட்டுமொத்த பசுமை ஹைட்ரஜன் மதிப்புச் சங்கிலியில் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களைப் பற்றி விவாதிக்க உலகளாவிய அறிவியல் மற்றும் தொழில்துறை சமூகத்தை ஒன்றிணைப்பதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

➢ **17வது இந்திய கூட்டுறவு மாநாடு**

✓ ஜூலை 1 அன்று, பிரதமர் நரேந்திர மோடி – புதுதில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் 17வது இந்திய கூட்டுறவு மாநாட்டில் உரையாற்றினார்.

✓ இந்திய தேசிய கூட்டுறவு சங்கம் 17வது இந்திய கூட்டுறவு மாநாட்டை ஜூலை 1 மற்றும் 2 ஆகிய தேதிகளில் நடத்தியது.



✓ கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறு போக்குகளைப் பற்றி விவாதிப்பது, பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகள், வேண்டுமென்றே எதிர்கொள்ளும் சவால்களை வெளிப்படுத்துவது மற்றும் இந்தியாவின் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கான எதிர்கால கொள்கை திசையை

வகுப்பதே இந்த மாநாட்டின் நோக்கம் ஆகும். இந்த மாநாட்டின்போது, 'அம்ரித் கால்: துடிப்பான இந்தியாவுக்கான கூட்டுறவின் மூலம் செழிப்பு' என்ற தலைப்பில் ஏழு தொழில்நுட்ப அமர்வுகள் நடைபெறும்.

➢ **இந்திய அரபு கூட்டாண்மை மாநாடு**

✓ ஒன்றிய அரசு – 6வது இந்தியா – அரபு கூட்டாண்மை மாநாட்டை ஜூலை 11-12 தேதிகளில் நடத்த உள்ளது.




✓ இந்தியா மற்றும் அரபு நாடுகளுக்கு இடையே பொருளாதார ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய இந்த மாநாடு முயல்கிறது.

✓ இந்த மாநாடு முதலீட்டின் பல்திசை ஓட்டத்தை ஊக்குவிப்பதையும், புதிய வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் முதலீட்டை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இது இந்திய – அரபு ஒத்துழைப்பில் ஒரு புதிய முன்னோக்கைக் கருத்தில் கொண்டு பரஸ்பர பொருளாதார உறவுகளை ஆழப்படுத்தவும் மறுவரையறை செய்யவும் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

➢ **புத்தொழில் 20 ஷிகர் உச்சி மாநாடு (Startup20 Shikhar Summit)**

✓ இந்தியாவின் ஜி20 தலைமையின்கீழ் புத்தொழில் 20 ஷிகர் உச்சி மாநாடு - ஹரியானா மாநிலம் குருகிராமில் ஜூலை 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.




✓ புத்தொழில் 20 ஏற்பாட்டுக் குழு (The Startup20 Engagement Group) இரண்டு நாள் புத்தொழில் 20 ஷிகார் உச்சி மாநாட்டை நடத்தியது.

✓ இந்த மாநாட்டின்போது, புத்தொழில் 20 அறிக்கை வெளியிடப்பட்டது. இது ஜி20 தலைவர்களை 2030க்குள் உலகளாவிய புத்தொழில் சுற்றுச் சூழல் அமைப்பில் கூட்டு முதலீட்டை 1 டிரில்லியன் டாலராக உயர்த்த வலியுறுத்தியது.

## ➢ ஐக்கிய அரபு அமீரகம் - இந்திய பொருளாதார உச்சி மாநாடு

✓ அபுதாபி அல் மரியா தீவில் உள்ள ஏடிஜிஎம் ஆடிட்டோரியத்தில் ஐக்கிய அரபு அமீரகம் - இந்தியா பொருளாதார உச்சி மாநாடு ஜூலை 3 அன்று நடைபெற்றது.

✓ இது 'சினெர்ஜிகளை வளர்ப்பது – பால்கன் மற்றும் புலி பொருளாதாரங்களை ஒன்றிணைத்தல்' என்ற கருப்பொருளின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது.

✓ இந்த மாநாட்டில் புதிய பொருளாதாரத்தில் முக்கிய தலைப்புகளில் விவாதங்கள் நடத்தப்பட்டன.

✓ ஐக்கிய அரபு அமீரகம் - இந்தியா பொருளாதார உச்சி மாநாடு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தியது மட்டுமில்லாமல் இரு நாடுகளுக்கும் முதலீடுகள் மற்றும் செழிப்புக்கான வழியைத் திறந்துள்ளது.

## ➢ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநிலத்தலைவர்கள் கூட்டமைப்பு கவுன்சில் (Shanghai Cooperation Organisation Council of Heads of State)

✓ ஷாங்காய் ஒத்துழைப்ப அமைப்பு நாடுகளின் தலைவர்கள் கவுன்சிலின் 23வது உச்சி மாநாடு – ஜூலை 4 அன்று பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்றது.



✓ பயங்கரவாதத்தை ஒழிக்க உறுப்பு நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் மோடி தனது உரையின்போது வலியுறுத்தினார்.

✓ இந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாடு 2023இன் கருப்பொருள் 'SECURE' ஆகும். இது பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு, இணைப்பு, ஒற்றுமை, இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கான மரியாதை மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு (security, economic development, connectivity, unity, respect for sovereignty and territorial integrity, and environmental protection) ஆகியவற்றைக் குறிக்கும்.

✓ 2023ஆம் ஆண்டின் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் இந்தியாவின் தலைவர் பதவியின் மையக் கருத்து 'SECURE-SCO' ஆகும்.

## ➢ சர்வதேச தமிழ் ஆய்வு மாநாடு

✓ சென்னை செம்மஞ்சேரியில் உள்ள ஆசிய ஆய்வுக் கழக வளாகத்தில், தமிழக சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் குடியுரிமை பெறாத தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், 11வது சர்வதேச தமிழ் ஆய்வு மாநாட்டை ஜூலை 7ஆம் தேதி தொடங்கி வைத்தார்.




- ✓ சர்வதேச தமிழ் ஆராய்ச்சி சங்கம் (The International Association of Tamil Research) சென்னையில் ஜூலை 7 முதல் 9 வரை மூன்று நாள் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்துகிறது.
- ✓ இந்த மாநாட்டின் கருப்பொருள், 'தமிழ்ச் செம்மொழிகள் மற்றும் கீழடியில் ஆரம்ப மற்றும் சமீபத்திய அகழ்வாராய்ச்சிகள் மற்றும் சங்க காலத்தின் பிற அறிவியல் சான்றுகளின் மறுமதிப்பீடுகளின் அடிப்படையில் தமிழர்கள், தமிழ் மொழி, இலக்கியம், கலாச்சாரம் மற்றும் நாகரிகத்தின் வரலாற்றை மீண்டும் எழுதுவதற்கான புதிய வரலாற்று ஆய்வு என்பதாகும்.

### ➢ ஜி20 கலாச்சாரக் குழு (CWG) கூட்டம்

- ✓ 3வது ஜி20 கலாச்சாரக் குழு (CWG) கூட்டம் - கர்நாடக மாநிலம் ஹம்பியில் ஜூலை 9ஆம் தேதி ஒன்றிய நாடாளுமன்ற விவகார அமைச்சர் பிரஹலாத் ஜோஷி முன்னிலையில் தொடங்கியது.



- ✓ 'கலாச்சார சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் மீட்டெடுத்தல்' என்ற தொனிப்பொருளில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.
- ✓ இந்தக் கூட்டத்தில் ஜி20 உறுப்பினர்கள், விருந்தினர் நாடுகள் மற்றும் பல சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
- ✓ இந்திய தலைமையின்கீழ் முன்மொழியப்பட்ட நான்கு கருப்பொருள்களில் இரண்டு நாள் விவாதங்கள் ஒருமித்த கருத்தை உருவாக்கின.

## ➢ நகர்ப்புற 20 மேயரக உச்சி மாநாடு (Urban 20 Mayoral Summit)

- ✓ இரண்டு நாள் நகர்ப்புற 20 மேயரக உச்சி மாநாடு – ஜூலை 7 மற்றும் 8 ஆம் தேதிகளில் காந்திநகரில் உள்ள அகமதாபாத் நகரத்தில் நடத்தப்பட்டது.
- ✓ மேயர்களிடமிருந்து ஜி20 தலைவர்களிடம் அறிக்கையை ஒப்படைத்ததன்மூலம் இந்த உச்சி மாநாடு முடிவடைந்தது.



- ✓ உலகெங்கிலும் உள்ள 105 நகரங்களால் இந்தத் தகவல் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. இதுவரை எந்த நகரப்புற 20 மேயரக உச்சி மாநாட்டு அறிக்கைக்கும் இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான ஒப்புதல்கள் பெறப்படவில்லை. மேலும், இது முந்தைய அறிக்கைகளுக்கான ஒப்புதல்களைவிட இரண்டு மடங்கு அதிகம் ஆகும்.

## ➢ விண்வெளி பொருளாதார தலைவர்கள் கூட்டம் (Space Economy Leaders' Meeting)

- ✓ ஜி20 விண்வெளிப் பொருளாதாரத் தலைவர்கள் கூட்டத்தின் 4வது பதிப்பு – பெங்களூருவில் ஜூலை 6 மற்றும் 7 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.
- ✓ ஜி20 குடையின்கீழ் இதுவே முதல் நேருக்கு நேர் விண்வெளி பொருளாதார தலைவர்கள் கூட்டம் ஆகும். முந்தைய கூட்டங்கள் மெய்நிகராகவோ அல்லது கலப்பு வடிவிலோ ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.




- ✓ 'புதிய விண்வெளி சகாப்தத்தை நோக்கி (பொருளாதாரம், பொறுப்பு, கூட்டணி)' என்ற தலைப்பில் கூட்டம் நடைபெற்றது.

- **ஜி20 மாநாடு ‘குற்றம் மற்றும் பாதுகாப்பு’**
  - ✓ ஜூலை 13 அன்று, ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித் ஷா - ஹரியானாவில் குருகிராமில், ‘பூஞ்சையற்ற டோக்கன்கள் (Non-Fungible Tokens), செயற்கை நுண்ணறிவு மற்றும் மெட்டாவெர்ஸ் யுகத்தில் குற்றம் மற்றும் பாதுகாப்பு’ என்ற இரண்டு நாள் ஜி20 மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.
  - ✓ இரண்டு நாள் மாநாட்டின்போது, பங்கேற்பாளர்கள் ஆறு தொழில்நுட்ப அமர்வுகளில் விரிவான விவாதங்களில் ஈடுபட்டனர்.

- **இந்தியாவின் ஜி20 தலைமையின்கீழ், மூன்றாவது ஷெர்பாக்கள் கூட்டம் (Third Sherpas Meeting under India’s G20 Presidency)**
  - ✓ இந்தியாவின் ஜி20 தலைமையின்கீழ் மூன்றாவது ஷெர்பாக்கள் கூட்டம் - கர்நாடகாவில் உள்ள ஹம்பியில் ஜூலை 23 அன்று தொடங்கியது.




  - ✓ இந்த மூன்று நாள் கூட்டம் இந்தியாவின் ஜி20 ஷெர்பா அமிதாப் காந்த் தலைமையில் நடைபெற்றது.
  - ✓ இந்தக் கூட்டத்தில் பசுமை மேம்பாடு, காலநிலை நிதி, சுற்றுச் சூழலுக்கான வாழ்க்கை முறை, துரிதப்படுத்தப்பட்ட, உள்ளடக்கிய மற்றும் நெகிழ்ச்சியான வளர்ச்சி, நிலையான வளர்ச்சி இலக்குகளில் முன்னேற்றம், தொழில்நுட்ப மாற்றம் மற்றும் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, 21ஆம் நூற்றாண்டின் பலதரப்பு நிறுவனங்கள் மற்றும் பெண்கள் தலைமையிலான வளர்ச்சி ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

- **வைகை ஆற்றுக்குப் புத்துயிர் அளிப்பதற்கான மாநாடு**
  - ✓ ஜூலை 15 ஆம் தேதி, மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் நடைபெற்ற வைகை ஆற்றின் புத்துயிர் மாநாட்டில், இந்தியாவின் ‘வாட்டர் மேன்’ ராஜேந்திரசிங் - வைகை ஆற்றைப் புதுப்பிக்கும் 10 ஆண்டு திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
  - ✓ இந்தத் திட்டத்தின்படி, முதற்கட்டமாக, ஆற்றில் அறிவியல் மற்றும் சமூக ஆய்வு நடத்தப்பட உள்ளது.
  - ✓ இரண்டாம் கட்டத்தில், நதிநீர் விழிப்புணர்வு தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி வழங்கப்படும்.




- ✓ மூன்றாவது கட்டத்தில், அரசு, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் உள்ளிட்ட நதியின் வளர்ச்சிக்குப் பொறுப்பான அனைத்து பங்குதாரர்களும் ஒரே மேடையில் ஒன்றிணைக்கப்படுவர்.
- ✓ நான்காவது கட்டத்தில் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட தொழில்நுட்பக் குழு உருவாக்கப்பட உள்ளது.
- ✓ ஐந்தாவது கட்டத்தில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்தும் திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

➢ **உலகளாவிய உணவு கட்டுப்பாட்டாளர்கள் உச்சி மாநாடு**

- ✓ ஜூலை 20 மற்றும் 21ஆம் தேதிகளில் புதுதில்லியில் உலகளாவிய உணவு ஒழுங்குமுறை உச்சி மாநாட்டை இந்தியா தொடங்கவுள்ளது.
- ✓ இந்த உச்சி மாநாட்டில் பல்வேறு நாடுகள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் தேசிய நிறுவனங்களைப் பிரிதிநிதித்துவப்படுத்தும் பரந்த அளவிலான பங்குதாரர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




- ✓ மேலும், ஒருங்கிணைக்கப்பட்ட டிஜிட்டல் டேஷ்போர்டு உலகளாவிய உணவு ஒழுங்குமுறை உச்சி மாநாடு, 2023இல் அறிமுகப்படுத்தப்படும். இது உணவு தொடர்பான விதிமுறைகள் மற்றும் தரங்களுக்கான மையப்படுத்தப்பட்ட தளமாக செயல்படும்.

➢ **உலகளாவிய கடல்சார் இந்திய உச்சி மாநாடு, 2023**

✓ துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம், 18 ஜூலை 2023 அன்று உலகளாவிய கடல்சார் இந்தியா உச்சி மாநாடு 2023 தொடங்கி வைக்கும் நிகழ்ச்சியை நடத்தியது.

✓ ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் ஸ்ரீசர்பானந்தா சோனோவால் கூறுகையில், உலகளாவிய கடல்சார் இந்தியா உச்சி மாநாட்டின் மூன்றாவது பதிப்பு 2023 அக்டோபரில் புதுதில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் நடைபெறும் என்று தெரிவித்தார்.

➢ **ஜி20 இன் அறிவியல் 20 உச்சி மாநாடு (Science20 Summit of G20)**

✓ கோயம்புத்தூரில் உள்ள ஈஷா யோகா மையத்தில் ஜூலை 21 முதல் 22 வரை ஜி20இன் அறிவியல் 20 உச்சி மாநாடு நடைபெற்றது.




✓ கல்வியாளர்கள், விஞ்ஞானிகள், வல்லுநர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் உள்ளிட்ட 20 நாடுகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

✓ அறிவியல் 20 ஏற்பாட்டுக் குழுவின் இந்த உச்சி மாநாட்டின்போது, முந்தைய மூன்று கூட்டங்களின் விவாதங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு முன்வைக்கப்படும்.

✓ இந்தக் குழு முந்தைய கூட்டங்களில் பசுமை ஆற்றல், சமூகத்துடன் அறிவியலை இணைத்தல் மற்றும் முழுமையான ஆரோக்கியம் ஆகிய கருப்பொருள்களைப் பற்றி விவாதித்தது, மற்றும் இந்த கருப்பொருள்களில் 20 நாடுகளின் கூட்டு அறிக்கையை வெளியிட உள்ளது.

➢ **5வது ஹெலிகாப்டர் மற்றும் சிறிய விமான உச்சி மாநாடு**

✓ ஒன்றிய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம், 5வது ஹெலிகாப்டர் மற்றும் சிறிய விமான உச்சி மாநாட்டை ஏற்பாடு செய்து, தொழில்துறை பங்குதாரர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒரே கூரையின்கீழ் கொண்டு வருகிறது. இந்தியாவின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறையை முன்னேற்றுவதற்கு ஒத்துழைப்பையும் திறமையான முடிவெடுப்பதையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த நிகழ்வு நடத்தப்படுகிறது.




- ✓ மத்தியப் பிரதேசத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரமான கஜுராஹோவில் இந்த உச்சி மாநாடு நடைபெறும் என்று ஒன்றிய விமானப் போக்குவரத்து அமைச்சகம் அறிவித்துள்ளது.

## ➢ சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை நிலைத்தன்மை பணிக்குழு (Environment and Climate Sustainability Working Group)

- ✓ 4வது சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை நிலைத்தன்மை செயற்குழு மற்றும் சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை அமைச்சர்கள் கூட்டம் - சென்னையில் ஜூலை 26-28. 2023 வரை நடைபெற்றது.




- ✓ இந்த மூன்று நாள் கூட்டத்தில் ஜி20 உறுப்பு நாடுகள், அழைப்பு நாடுகள் மற்றும் பல சர்வதேச அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 300 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
- ✓ இந்தக் கூட்டத்தில் நிலச்சீரழிவு, பல்லுயிர் பெருக்கம் மற்றும் காடழிப்பு, நீலப் பொருளாதாரம் மற்றும் வட்டப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவை குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

# பாதுகாப்பு

## ➢ தரங் சக்தி (Tarang Shakti)

- ✓ இந்திய விமானப்படை - இந்த ஆண்டு இறுதியில் அதன் முதல் பலதரப்பு விமானப்படை பயிற்சியை நடத்தத் தயாராகி வருகிறது.
- ✓ 'தரங் சக்தி' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் பயிற்சியில் 12 நாடுகள் பங்கேற்கும், ஆறு நாடுகள் தங்கள் விமானங்களுடன் இணைகின்றன, மீதமுள்ள ஆறு நாடுகள் பார்வையாளர்களாக இருக்கும்.
- ✓ அக்டோபர் அல்லது நவம்பரில் ராஜஸ்தான் செக்டாரில் நடைபெற்ற இந்த தரங் சக்தியானது, பங்கேற்கும் விமானப்படைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு, இயங்குதன்மை மற்றும் இணைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ ஜிமெக்ஸ் (JIMEX) 23

- ✓ இருதரப்பு ஜப்பான் - இந்தியா கடல்சார் பயிற்சி (Japan-India Maritime Exercise) 2023 விசாகப்பட்டினத்தில் தொடங்கியது.
- ✓ இந்தப் பயிற்சியானது பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பிற்கான பரஸ்பர ஒத்துழைப்பையும், அர்ப்பணிப்பையும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ ஜிமெக்ஸ் 23 ஆனது 2012இல் ஆரம்பிக்கப்பட்ட ஜிமெக்சின் 11வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- ✓ இந்தப் பயிற்சியானது ஆறு நாட்களுக்கு இரண்டு கட்டங்களாக நடத்தப்படும் - ஒன்று துறைமுகக் கட்டம் மற்றொன்று கடல்கட்டம் ஆகும்.

## ➢ சால்வெக்ஸ் பயிற்சி (SALVEX Exercise)

- ✓ இந்திய கடற்படை மற்றும் அமெரிக்க கடற்படை இணைந்து ஜூன் 26 முதல் ஜூலை 6, 2023 வரை கொச்சியில் நடைபெற்ற இந்திய கடற்படை – அமெரிக்க கடற்படையின் காப்பு மற்றும் வெடிக்கும் ஆயுதங்களை அகற்றும் பயிற்சி, சால்வெக்ஸ்-ஐ வெற்றிகரமாக நடத்தி முடித்தன.




- ✓ இந்தக் கூட்டுப் பயிற்சியானது 2005ஆம் ஆண்டு முதல் ஒரு வழக்கமான அம்சமாக இருந்து வருகிறது. காப்பு மற்றும் வெடிக்கும் ஆயுதங்களை அகற்றும் பயிற்சி செயல்பாடுகள் ஆகிய துறைகளில் இரு கடற்படைகளுக்கும் இடையே ஒத்துழைப்பு மற்றும் இணைப்பு மேம்படுத்தப்படுகிறது.

➢ **பரந்த வாள் (Broader Sword)**

- ✓ சர்வதேச அஞ்சல் அமைப்பு மூலம் மருந்துகள், சாதனங்கள் மற்றும் முன்னோடி இரசாயனங்கள் ஆகியவற்றின் சட்டவிரோத ஏற்றுமதியைத் தடுக்கும் நோக்கில், இந்தியாவும் அமெரிக்காவும் சமீபத்தில் ஆபரேஷன் 'பரந்த வாள்' நடவடிக்கையில் இணைந்தன.
- ✓ ஜூன் 2023இல் நடத்தப்பட் இந்த நடவடிக்கையின் விளைவாக, அமெரிக்க நுகர்வோருக்கு அனுப்பப்பட்ட சட்டவிரோத மற்றும் அங்கீகரிக்கப்படாத மருந்துகளின் 500க்கும் மேற்பட்ட ஷிப்மென்ட்கள் தடுக்கப்பட்டன.

➢ **CMF EX 'OP தெற்கு தயார்நிலை – 2023**

- ✓ ஒரங்கிணைந்த கடல்சார் படைகளால் நடத்தப்பட்ட ஓபி தெற்கு தயார்நிலை 2023இல் பங்கேற்பதற்காக ஐஎன்எஸ் சுனைனா 10-12 ஜூலை 23 வரை செஷல்சில் இருந்தது.




- ✓ இந்தப் பயணம், கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துதல், பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் சுதந்திரமான வழிசெலுத்துதலை உறுதி செய்வதற்காக கடற்கொள்ளையர்களை எதிர்த்துப் போரிடுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட பன்னாட்டு முயற்சியான ஒருங்கிணைந்த கடல்சார் படைகளின் பயிற்சி மூலம் பலதரப்பு உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

➢ **பாதுகாப்பு கையகப்படுத்துதல் கவுன்சில் (Defence Acquisitions Council)**

- ✓ ஜூலை 13 அன்று, பாதுகாப்பு அமைச்சகம் - பிரான்சிடம் இருந்து 26 ர∴பேல் -மரைன் போர் விமானங்கள் மற்றும் மூன்று ஸ்கார்பீன் டீசல் - மின்சார நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்குவதற்கு ஒப்புதல் அளித்தது.
- ✓ ராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்பு கையகப்படுத்துதல் கவுன்சில், கடற்படைக்கான இரட்டைக் கொள்முதல்களுக்கான 'இரட்டைக் கொள்முதல்களுக்கான தேவையை' ஏற்றுக் கொண்டது. இவ்விரண்டின் மொத்த செலவு ரூ.80,000 கோடி (9 பில்லியன் யூரோ) ஆகும்.

➢ **நாடோடி யானை (Nomadic Elephant) – 2023**

- ✓ 'நாடோடி யானை 2023' என்ற கூட்டு இராணுவப் பயிற்சியின் 15வது பதிப்பில் பங்கேற்பதற்காக 43 இந்திய இராணுவ வீரர்கள் குழு இன்று மங்கோலியாவுக்குப் புறப்பட்டது.



- ✓ இந்தப் பயிற்சியானது மங்கோலியாவின் உலான்பாதரில் ஜூலை 17 முதல் ஜூலை 31, 2023 வரை நடைபெற்றது.
- ✓ நாடோடி யானை என்பது இந்தியாவிற்கும் மங்கோலியாவிற்கும் இடையிலான வருடாந்திர பயிற்சியாகும். இது இரண்டு நாடுகளிலும் மாறி மாறி நடத்தப்படுகிறது.

## ➢ MPX கூட்டுப் பயிற்சி

- ✓ இந்திய, இந்தோனேசிய கடற்படைக் கப்பல்கள் எம்பிஎக்ஸ் கூட்டுப் பயிற்சியை நடத்துகின்றன.
- ✓ இந்தோனேசிய கடற்படையுடன் கடல்சார் கூட்டாண்மை பயிற்சியில் பங்கேற்பதற்காக ஐஎன்எஸ் சஹ்யாத்ரி மற்றும் ஐஎன்எஸ் கொல்கத்தா ஆகிய இரண்டு இந்திய கடற்படைக் கப்பல்கள் ஜாகர்த்தாவை வந்தடைந்தன.
- ✓ இரு கடற்படைகளுக்கும் இடையே பரஸ்பர ஒத்துழைப்பையும் புரிந்துணர்வையும் வலுப்படுத்துவதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

## ➢ இந்தியா, ஐஎன்எஸ் கிர்பானை வியட்நாமிடம் ஒப்படைத்தது.



- ✓ வியட்நாமின் கேம் ரானில் நடைபெற்ற விழாவில் 32 ஆண்டுகளாக இந்திய கடற்படையில் பணியாற்றிய கிர்பான் என்ற இந்தியக் கடற்படைக் கப்பல் பணிநீக்கம் செய்யப்பட்டு வியட்நாம் மக்கள் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ✓ இந்தியா முதன்முறையாக முழுமையாக செயல்படும் கோர்வெட்டை வெளிநாட்டிற்கு மாற்றிய முக்கியமான சந்தர்ப்பம் இதுவாகும்.
- ✓ ஐஎன்எஸ் கிர்பானின் ஒப்படைப்பு, இந்தியாவிற்கும் வியட்நாமிற்கும் இடையிலான ஆழமான பாதுகாப்பு உறவுகளைக் குறிக்கிறது.

# விருதுகள்

- **யானை குடும்ப சுற்றுச் சூழல் விருது**

✓ பிரிட்டன் மன்னர் மூன்றாம் சார்லஸ் மற்றும் ராணி கமிலா – ஒரு விழாவில் இந்திய பாதுகாவலர்களுக்கு மதிப்புமிக்க யானை குடும்ப சுற்றுச் சூழல் விருதை வழங்கினார்.




✓ யானைக் குடும்பம் என்பது ஆசிய யானைகளைப் பாதகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனம் ஆகும். இது மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையில் இணக்கமான வாழ்க்கையை ஊக்குவிக்கும் திட்டங்களை ஆதரிக்கிறது.

✓ யானைப் பாதுகாப்பில் ஆழ்ந்த ஆர்வம் கொண்ட ராணி கமிலாவின் சகோதரர் மறைந்த மார்க் ஷான்ட் என்பவரால் இந்த அமைப்பு நிறுவப்பட்டது.

- **மரியாதைக்குரிய படையணியின் கிராண்ட் கிராஸ் (Grand Cross of the Legion of Honour)**



✓ பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானால் பிரான்சின் உயரிய சிவிலியன் மற்றும் ராணுவ கௌரவமான கிராண்ட் கிராஸ் ஆப் தி லீஜியன் ஆப் ஹானர் என்ற விருதைப் பெற்ற முதல் இந்திய பிரதமர் என்ற பெருமையை பிரதமர் நரேந்திர மோடி பெற்றுள்ளார்.

✓ ஜூலை 13, 2023 அன்று எலிசி அரண்மனையில் பிரதமர் மோடி இந்த மரியாதையைப் பெற்றார்.

- **Chevalier de l'Ordre des Arts et des Lettres (ஆர்டர் ஆப் ஆர்ட்ஸ் அண்ட் லெட்டர்ஸ்) விருது**

  பிரெஞ்சு அரசு - இந்திய பாரம்பரிய பாடகர் பத்மஸ்ரீ அருணா சாய்ராம் மற்றும் புல்லாங்குழல் கலைஞர் ஷஷாங்க் சுப்ரமணியம் ஆகியோரை மதிப்புமிக்க செவாலியர் டி எல்' ஆர்டி டெஸ் ஆர்ட்ஸ் எட்டெஸ் லெட்டர்ஸ் (ஆர்டர் ஆப் ஆர்ட்ஸ் அண்ட் லெட்டர்ஸ்) விருதுக்குத் தேர்வு செய்துள்ளது.



- ✓ பிரான்ஸ் மற்றும் இந்தியாவை தங்கள் இசையின்மூலம் இணைப்பதில் முக்கிய பங்கு வகித்ததற்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

- **பூமி சம்மான் (Bhoomi Samman)**

- ✓ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு – ஜூலை 18 அன்று புதுதில்லியில் 'பூமி சம்மான்' 2023 விருதை வழங்குகிறார்.




- ✓ ஒன்பது மாநில அரசுச் செயலாளர்கள் மற்றும் 68 மாவட்ட ஆட்சியர்களுக்கு அவர்களின் குழுக்களுடன் சேர்ந்து பூமி சம்மான் விருது வழங்கப்படும்.
- ✓ டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்கள் நவீனமயமாக்கல் திட்டத்தை (Digital India Land Records Modernization Programme) செயல்படுத்துவதில் தனிநபர்கள் மற்றும் குழுக்களின் சிறந்த செயல்பாட்டிற்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

- **சிறந்த மனிதர் விருது**

- ✓ தமிழகத்தின் தலைநகரான சென்னையில், சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியை வெற்றிகரமாக நடத்தியதற்குப் பாராட்டு தெரிவித்து, ஆசிய செஸ் கூட்டமைப்பு, தமிழக

முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு ஜூலை 28. 2023 அன்று, ‘சிறந்த மனிதர் விருது’ வழங்கப்பட்டது.

- ✓ 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் முதன்முறையாக இந்தியாவில் நடைபெற்றது.
- ✓ இந்தப் போட்டியை தமிழ்நாடு நடத்தியது குறிப்பிடத்தக்கது.

## ➢ போஸ் வாழ்நாள் சாதனையாளர் விருது


- ✓ எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் சர் ஜே.சி. போஸ் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளைப் பெறுகிறார். கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனையின் எலும்பியல் மற்றும் முதுகுத் தண்டு அறுவை சிகிச்சைத் துறையின் தலைவர் ராஜசேகரனுக்கு முதுகுத் தண்டு நோய்களுக்கான ஆராய்ச்சியில் சிறந்த பங்களிப்பிற்காக, சர்.ஜே.சி. போஸ். வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.
- ✓ ஸ்டான்.ஃபோர்ட் பல்கலைக் கழகம், உலகின் முதல் ஒரு விழுக்காடு விஞ்ஞானிகளில் ஒருவராக டாக்டர். ராஜசேகரனை தரவரிசைப்படுத்தியிருப்பதாலும், எலும்பியல் அறுவை சிகிச்சையில் அதிக எண்ணிக்கையிலான ஆய்வுக் கட்டுரைகளை அவர் வெளியிட்டிருப்பதாலும், டாக்டர். ராஜசேகரனுக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டது.

## ➢ எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை சதுப்பு நிலக் காடுகள் பற்றிய புத்தகத்தை வெளியிடுகிறது.

- ✓ எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையைச் சேர்ந்த விஞ்ஞானிகளால் எழுதப்பட்ட, சதுப்பு நில சுற்றுச் சூழல் அமைப்பின் பல்லுயிர் மற்றும் முக்கியத்துவம் என்ற புத்தகத்தை ஒன்றிய சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சர் பூபேந்தர் யாதவ் வெள்ளிக்கிழமை அன்று வெளியிட்டார்.

# பொருளாதாரம்

➢ **இந்தியாவின் சரக்கு மற்றும் சேவை வரி வசூல் - ஜூன் மாதத்தில் ரூ.1.60 இலட்சம் கோடியைத் தாண்டியது.**




✓ நிதி அமைச்சகத்தின் கூற்றுப்படி, ஜிஎஸ்டி தொடங்கப்பட்டதில் இருந்து நான்காவது முறையாக மொத்த வசூல் ரூ.1.6 இலட்சம் கோடியைத் தாண்டியுள்ளது.

✓ வசூல் தொடங்கியதில் இருந்து ஏழாவது முறையாக ரூ.1.50 இலட்சம் கோடியைத் தாண்டியுள்ளது.

➢ **வேவ் (WAVE) திட்டம்**

✓ பொதுத்துறை கடன் வழங்கும் வங்கியாகிய இந்தியன் வங்கி – அதன் டிஜிட்டல் உருமாற்ற முயற்சியின்கீழ் புதிய சேவைகளை வெளியிட்டுள்ளது – அது ப்ராஜெக் வேவ் ஆகும்.




✓ அதன்படி, சென்னையைச் சேர்ந்த இந்த வங்கி, நேஷனல் மின்-ஆளுகை சேவை லிமிடெட் (National E-Governance Services Limited) உடன் இணைந்து மின்னணு வங்கி உத்தரவாதம் (electronic bank guarantee) சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ இந்த நடவடிக்கையானது ஜிஎஸ்டி தாக்கல்களில் ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்களின் நிதித் தேவைகளை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# புகழ்பெற்ற நபர்கள்


- **ஷமினா சிங்**
- அமெரிக்க அதிபர் ஜோ பிடன் ஸ்ரீ அதிபரின் ஏற்றுமதி கவுன்சிலுக்கு பிரபல இந்திய-அமெரிக்க வணிகத் தலைவரான ஷமினா சிங்கை நியமிப்பதாக அறிவித்துள்ளார்.



- இந்தக் கவுன்சில் சர்வதேச வர்த்தகத்திற்கான முதன்மை தேசிய ஆலோசனைக் குழுவாக செயல்படுகிறது.
- இது அமெரிக்க வர்த்தக செயல்திறனைப் பாதிக்கும் அரசாங்க கொள்கைகள் மற்றும் திட்டங்கள் தொடர்பாக அதிபருக்கு ஆலோசனை வழங்குகிறது, ஏற்றுமதி விரிவாக்கத்தை ஊக்குவிக்கிறது மற்றும் வணிகம், தொழில்துறை, விவசாயம், தொழிலாளர் மற்றும் அரசுத் துறைகளில் வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளை விவாதிப்பதற்கும் தீர்ப்பதற்கும் ஒரு மன்றத்தையும் வழங்குகிறது.


# புத்தகங்களும் ஆசிரியர்களும்

- **மாயா, மோடி. ஆசாத்**




- ✓ சுதா பாய் மற்றும் சஜ்ஜன் குமார் ஆகியோர், 'மாயா, மோடி, ஆசாத்: இந்துத்துவ காலத்தில் தலித் அரசியல்' என்ற புத்தகத்தை எழுதியுள்ளனர்.
- ✓ இந்தப் புத்தகத்தில், தலித் அரசியலில் மாயா, மோடி மற்றும் ஆசாத் ஆகியோருக்கு இடையேயான ஊடாட்டம் பற்றிய புலனுணர்வு மற்றும் சிந்தனையைத் தூண்டும் ஆய்வுகளை வழங்குகிறார்கள்.
- ✓ தலித் அரசியலில் இயக்கவியலை மட்டுமல்லாது, இந்தியாவின் பரந்த ஜனநாயக நிலப்பரப்பையும் புரிந்து கொள்வதில் அவர்களின் பகுப்பாய்வு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது, குறிப்பாக 2024 பொதுத் தேர்தலை நாம் அணுகவுள்ள இந்த நேரத்தில்.

- **'பிரிசம்: வானவில்லின் மூதாதையர் தங்குமிடம்' (Prism: The Ancestral Abode of Rainbow)**




- ✓ ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் உள்ள ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து தேசிய விருது பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர் - எழுத்தாளர் வினோத் மன்காராவின் புதிய புத்தகம் வெளியிடப்பட்டது.
- ✓ நாடு பெரிதும் எதிர்பார்க்கும் சந்திரயான்-3க்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வரும் நிலையில், அறிவியல் கட்டுரைகளின் தொகுப்பான, 'பிரிசம்: வானவில்லின் மூதாதையர் தங்குமிடம்' என்ற புத்தகத்தின் தனித்துவமான வெளியீடு சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் உள்ள ராக்கெட் ஏவுதளத்தில் நடைபெற்றது.

➢ **உடைந்த கண்ணாடி மூலம்: ஒரு சுயசரிதை (Through the Broken Glass: An Autobiography") – ஆசிரியர் டி.என். சேஷன்**

- ✓ 'உடைந்த கண்ணாடி மூலம்: ஒரு சுயசரிதை' என்ற இந்த புத்தகத்தை, இந்திய தேர்தல்களில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்திய இந்திய முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் சேஷன் எழுதியுள்ளார்.
- ✓ இதை ரூபா பப்ளிகேஷன்ஸ் இந்தியா என்ற நிறுவனம் வெளியிட்டது. இந்த சுயசரிதையில் 1990 முதல் 1995 வரையில் அவர் தலைமை தேர்தல் ஆணையராக பதவி வகித்த காலத்தில் நடந்த நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார். இதில் 368 பக்கங்கள் அடங்கியுள்ளன. 2019இல் அவர் இறந்து 4 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

➢ **நினைவுகள் ஒருபோதும் இறக்காது (Memories Never Die)**

- ✓ 'நினைவுகள் ஒருபோதும் இறக்காது' என்ற ஒரு புத்தகத்தை ஒன்றிய அமைச்சர் அமித் ஷா வெளியிட்டார்.




- ✓ மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்.ஏ.பி.ஜெ. அப்துல் கலாமின் வாழ்க்கை மற்றும் மரபுக்கு இந்தப் புத்தகம் அஞ்சலி செலுத்துகிறது.
- ✓ டாக்டர்.ஏ.பி.ஜெ.எம். நசிமா மரைக்காயர் மற்றும் விஞ்ஞானி டாக்டர் ஒய்.எஸ். ராஜன் ஆகியோர் இணைந்து இந்நூலை எழுதியுள்ளனர்.

# அறிவியல், சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்பம்

➢ **யூக்ளிட் விண்வெளி செயற்கைக்கோள் (Euclid Space Satellite)**

- ஐரோப்பாவின் யூக்ளிட் விண்வெளி தொலைநோக்கி 1 ஜூலை 2023 அன்று ஏவப்பட்டது.
- கிரேக்க கணிதவியலாளரின் பெயர் வைக்கப்பட்ட இந்த யூக்ளிட் தொலைநோக்கியானது, பூமியிலிருந்து 10 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள விண்மீன் திறள்களை ஆய்வு செய்வதற்காக பரந்த கோண தொலைநோக்கியைப் பயன்படுத்தி இருண்ட பிரபஞ்சத்தை ஆராய உள்ளது.
- யூக்ளிட் மிஷனானது இருண்ட பொருள் மற்றும் இருண்ட ஆற்றலின் பரிணாமத்தை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அறியப்பட்ட பிரபஞ்சத்தின் 95 விழுக்காடு ஆகும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

➢ **காக்ரபார் அணுமின் திட்டம் (Kakrapar Atomic Power Project)**

- இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 700 - மெகாவாட் அணுசக்தி உலை, குஜராத்தில் உள்ள காக்கரபார் அணுமின் திட்டத்தில் வணிக நடவடிக்கைகள் வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டன. இது நாட்டின் அணுசக்தி துறையில் குறிப்பிடத்தக்க ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது.



- KAPP-3, என்று அழைக்கப்படும் இந்த அணுஉலை, ஜுன் 30, 2023 அன்று அதன் மொத்த மின் திறனில் 90 விழுக்காட்டில் இயங்கத் தொடங்கியது என்பதை KAPP இன் மூத்த அதிகாரி உறுதிப்படுத்தினார்.

➢ **இந்தியாவின் முதல் நேவிக்கை (NavIC) எலெனா அறிமகப்படுத்தியது**

- வழிசெலுத்துதல் செயலிகள் மற்றும் சேவைகளில் தன்னிறைவை அடைவதற்கான குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தில், பெங்களுரைச் சேர்ந்த எலினா ஜியோ சிஸ்டம்ஸ் என்ற நிறுவனம், இந்திய பிராந்திய வழிசெலுத்துதல் செயற்கைக்கோள் அமைப்பின் (Indian Regional Navigation Satellite System) அடிப்படையில் நாட்டின் முதல் கையடக்க வழிசெலுத்துதல் சாதனத்தை வெளியிட்டது.
- இரயில்வே, நில ஆய்வுகள், தொலைத் தொடர்பு மற்றும் ஹைட்ரோகார்பன் ஆய்வு போன்ற பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு துல்லியமான திசைகளை வழங்குவதை இந்த சாதனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ திரெட்ஸ் (Threads)

✓ அமெரிக்காவைச் சேர்ந்த மாபெரும் தொழில்நுட்ப நிறுவனமான மெட்டா பிளாட்ஃபார்மஸ் - உரை புதுப்பிப்புகளைப் பகிர்வதற்கும் பொது உரையாடல்களில் சேர்வதற்கும் அதன் புதிய சமூக ஊடக தளமான 'த்ரெட்ஸ்'ஐ அதிகாரபூர்வமான வெளியிட்டுள்ளது.




✓ இந்த த்ரெட்ஸ், அது அறிமுகமான 24 மணி நேரத்திற்குள், ஒரு அற்புதமான எழுச்சியைக் கண்டது. அதாவது 95 மில்லியன் இடுகைகளைத் தாண்டி 50 மில்லியனுக்கும் அதிகமான சுயவிவரங்களையும் ஈர்த்துள்ளது.

✓ மெட்டாவின் இன்ஸ்டாகிராம் குழுவால் உருவாக்கப்பட்ட இந்த திரெட்ஸ், ஜூலை 5 அன்று 100 நாடுகளில் உள்ள ஐஓஎஸ் மற்றும் ஆண்டிராய்டு பயனர்களுக்கு அறிமகப்படுத்தப்பட்டது. இது ஆப் ஸ்டோரின் இலவச செயலி தரவரிசையில் உடனடியாக உயர்ந்தது.

✓ சமூக ஊடக ஜாம்பவான்களான முகநூல் மற்றும் இன்ஸ்டாகிராமின் தாய் நிறுவனம்தான் இந்த மெட்டா ஆகும்.

## ➢ சந்திரயான் - 3

✓ ஜூலை 6ஆம் தேதி, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமாகிய இஸ்ரோ, சந்திரயான்-3 என்ற சந்திரன் மிஷன் ஜூலை 14 ஆம் தேதி விண்ணில் ஏவப்படும் என்று அறிவித்தது.




✓ இஸ்ரோவின் புதிய ஹெவி லிஃப்ட் ஏவுகணை வாகனமான மார்க்-3, ஒரு ஒருங்கிணைந்த தொகுதியைச் சுமந்து கொண்டு ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து பிற்பகல் 2.35 மணிக்கு புறப்பட்டது.

- ✓ இஸ்ரோ தலைவர் எஸ் சோம்நாத்தின் கூற்றுப்படி, சந்திரயான்-3 ஜூலை 14 அன்று விண்ணில் செலுத்தப்படும், எல்லாம் சரியாக நடந்தால், அது ஆகஸ்ட் 23 அன்று தரையிறங்கும்.

➢ **இந்தியா தனது முதல் பிராந்திய செயற்கை நுண்ணறிவு செய்தி தொகுப்பாளர் 'லிசா'வை வரவேற்கிறது**



- ✓ செயற்கை நுண்ணறிவு துறையில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாக, ஒடியாவைச் சேர்ந்த செய்தி நிலையமான ஒடிஷா டி.வி. இந்தியாவின் முதல் பிராந்திய செயற்கை நுண்ணறிவு செய்தி தொகுப்பாளரான 'லிசா'வை வெளியிட்டது.
- ✓ லிசாவின் அறிமுகமானது, தொழில்துறையில் புரட்சியை ஏற்படுத்தும் திறனுடன், தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் பத்திரிகையில் ஒரு திருப்பு முனையான தருணத்தைக் குறிக்கிறது.
- ✓ இந்தியாவின் முதல் பிராந்திய செயற்கை நுண்ணறிவு செய்தி தொகுப்பாளராக லிசா தோன்றியதன் மூலம், ஊடகத் துறையில் செயற்கை நுண்ணறிவின் எல்லைகள் தொடர்ந்து தள்ளப்பட்டு, பல்வேறு மொழிகளிலும் பிராந்திய சூழல்களிலும் ஈடுபாடு மற்றும் ஆற்றல் மிக்க செய்திகளை வழங்குவதற்கான புதிய வாய்ப்புகளைத் திறக்கிறது.

➢ **சந்திரயான்-3**

- ✓ இஸ்ரோவின் எல்எம்வி 3 ராக்கெட், சந்திரயான்-3ன் லேண்டரையும், உள்ளே இருக்கும் ரோவரையும் சுமந்து கொண்டு ஜூலை 14 ஆம் மதியம் 2.35 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து புறப்பட்டது.

- ✓ இந்தத் திட்டத்தின்படி, சந்திரயான்-3 லேண்டர் விக்ரம் 40 நாள் பயணத்திற்குப் பிறகு ஆகஸ்ட் 23 அன்று மாலை 5.47 மணிக்கு சந்திரனின் மேற்பரப்பைத் தொடும்.
- ✓ சந்திரயான்-3, 'நிலவில் இருந்து பூமியை அதன் வாழக்கூடிய கிரகம் போன்ற அம்சங்களை ஆய்வு செய்வதற்கும், எதிர்காலத்தில் வெளிக்கோள்களை ஆராய இந்தத் தகவலைப் பயன்படுத்துவதற்கும்' ஒரு பேலோடையும் சுமந்து செல்கிறது.
- ✓ விக்ரம் மென்மையாக தரையிறங்கினால், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவிற்குப் பிறகு- இந்த அறிவியல் சாதனையை எட்டிய நான்காவது நாடாக இந்தியா இருக்கும்.
- ✓ இந்த விக்ரம் தரையிறங்குவதற்காக தென் துருவத்திற்கு அருகிலுள்ள ஒரு பகுதியை இஸ்ரோ தேர்வு செய்துள்ளது.

**இந்தியாவின் 34வது மூன்ஷாட்**

இஸ்ரோ ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.35 மணிக்கு எல்விஎம்3 விண்கலத்தில் வைத்து சந்திரயான்-3 ஐ விண்ணில் செலுத்தியது. இது 40 நாட்களுக்குப் பிறகு நிலவில் மெதுவாகத் தரையிறங்கும் என்ற நம்பிக்கை உள்ளது. இதற்காக விண்வெளி நிறுவனம் ஒரு எச்சரிக்கையான அணுகுமுறையை பின்பற்றி, பல முக்கிய மாற்றங்களைச் செயல்படுத்தியுள்ளது, குறிப்பாக விக்ரம் லேண்டரில். சந்திரனுக்கு இஸ்ரோவின் முதல் பயணமானது, 2008இல் சந்திரயான்-1 ஆகும். இந்தியா அதன் பின்னர், மேம்பட்ட சந்திர ரோவர்களை மூனாவுக்கு 'இம்பாக்ட் ப்ரோப்' அனுப்புவதில் தேர்ச்சி பெற்றுள்ளது.

இந்த ஏவுதல் அக்டோபர் 22. 2008 அன்று தொடங்கப்பட்டது. மூன் இம்பாக்ட் ஆய்வு நீர் மூலக்கூறுகளைக் கண்டுபிடித்தது.

**சந்திரயான்-1**

ஆர்பிட்டர் விவரக் குறிப்புகள்
எடை: 1380 கிலோ
பணி வாழ்க்கை: 2 ஆண்டுகள்
சக்தி : 700W
பேலோடுகள்: 6 வெளிநாட்டு பேலோடுகள் உள்ளிட்ட 11

**தோல்வி பாடங்கள்**

- சந்திரயான்-2இல் இருந்து கற்றவை: தோல்வியைத் தடுக்க இஸ்ரோ அதன் வன்பொருள். மென்பொருள், சென்சார்கள் மற்றும் அல்காரிதம்களில் மாற்றங்களைச் செய்துள்ளது. விக்ரம் லேண்டர், அதன் சா∴ப்ட் லேண்டிங் அறிவியல் நோக்கங்களை அடைய முக்கியமானது என்பதால் அது மேம்படுத்தப்பட்டது.
- கடந்த முறையைப் போலல்லாமல், சந்திரயான்-3 இல் உள்ள ஆர்பிட்டரை உந்து விசை தொகுதி மாற்றுகிறது. தரையிறங்கும் தொகுதியைக் கொண்டு செல்வதே இதன் முதன்மையான பணியாகும். சந்திரயான்-2 மூலம் 8 பேலோடைக் கொண்டு சென்றதை ஒப்பிடும்போது இது 1 பேலோடைக் கொண்டு செல்கிறது.

**விக்ரமில் ஏற்பட்டுள்ள முக்கியமான முன்னேற்றங்கள்:**

- எடை மேலாண்மைக்காக ஐந்தாரம் எஞ்சின் அகற்றப்பட்டது.
- இதன் கால்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன.
- வேக வரம்பு 2m/wsec இலிருந்து 3m/wsec ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- கூடுதல் சென்சார் (லேசர் டாப்ளர் வேக மீட்டர்) தேவையற்றதைச் சேர்க்கிறது.
- .இது அதிக எரிபொருள், கூடுதல் சோலார் பேனல்கள் மற்றும் கண்காணிப்பு டெலிமெட்ரி மற்றும் கட்டளை ஆண்டெனாக்களைக் கொண்டுள்ளது.
- உந்துதல் இடையூறுகளின் காரணமாக பிழைகளை நிகழ்நேரத்தில் சரிசெய்வதை உறுதி செய்வதற்காக மென்பொருளைப் புதுப்பித்துள்ளது.
- தரையிறங்கு தளம் சந்திராயன்-2இன் 2m/2sec இலிருந்து 4km x 2.5 km ஆக மேம்பட்டுள்ளது.

செலுத்தப்பட்டது : ஜுலை 22, 2019
**சந்திரயான் - 2**
லேண்டர் - ரோவர் விவரக் குறிப்புகள்
பணி வாழ்க்கை: 1 சந்திர நாள் (14 பூமி நாட்கள்)

நிறை: ரோவர் (27 கிலோ) உட்பட 1471 கிலோ
சக்தி: 650 வா
பேலோடுகள்: 2 ரோவர்கள் உட்பட 6

ஆர்பிட்டர் விவரக் குறிப்புகள்
நிறை: 2379 கிலோ
சக்தி : 100 டபிள்யூ
பேலோடுகள்: 8

**சந்திரயான் -3**
லேண்டர்- ரோவர் விவரக் குறிப்புகள்
பணி வாழ்க்கை: 1 சந்திர நாள் (14 பூமி நாட்கள்)
நிறை: 738 W.
பேலோடுகள்: ரோவர் (2) உட்பட 6

உந்துதல்
தொகுதி விவரக் குறிப்புகள
நிறை: 2145.01 கிலோ
சக்தி: 738 W.
பேலோடுகள்:1

**பூமியின் செயற்கைக் கோளுக்கு 10-கட்ட பயணம்**
பூமி – மையக் கட்டம் (EARTH 0 CENTRIC PHASE) (கட்டம் 1)

- இது 3 நிலைகளைக் கொண்டுள்ளது: முன்வெளியீட்டு தயாரிப்புகள். இவை முழுமையானவை மற்றும் செலுத்துதல் மற்றும் ஏற்றம் கட்டம், மற்றும் பூமியுடன் இணைந்த கையாளுதல் கட்டம்.
- என்ன நடக்கிறது: விண்கலம் ஏவப்பட்டு, உத்தேசிக்கப்பட்ட சுற்றுப்பாதையில் வைக்கப்பட்டவுடன், இஸ்ரோ பெரிய கையாளுதல் பணிகளைச் செய்கிறது- எண்.1, 3, 4 மற்றும் 5- அப்போஜியை உயர்த்துதல் - (பூமியிலிருந்து மிக தொலைவில் உள்ள புள்ளி). இரண்டாவது கையாளுதல் பணி – பெரிஜியை (பூமிக்கு நெருக்கமான புள்ளி அதிகரிப்பதாகும்.

சந்திரன் பரிமாற்றக் கட்டம் (கட்டம் 2):

இது விண்கலத்தை சந்திரனை நோக்கி செலுத்தும் கட்டமாகும். அனைத்தும் திட்டமிட்டபடி நடைபெற்றால் டிரான்ஸ்லூனார் செருகல் ஜூலை 31 அன்று நடைபெறும்.

சந்திரன் சுற்றுப்பாதை செருகல் (கட்டம் 3):

டிரான்ஸ்லூனார் செருகல் (கட்டம் 3)க்குப் பிறகு, சந்திரயான் - 3 ஐந்தரை நாட்களுக்கு சந்திரனை நோக்கி பயணிக்கும் ஆகஸ்ட் 5ஆம் தேதி வாக்கில் நிலவின் சுற்றுப்பாதை செருகுதல் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிலவில் மேற்கொள்ளப்படும் கையாளுதல்கள் (கட்டங்கள் 4 மற்றும் 5)

நிலவின் சுற்றுப்பாதை செருகல் விண்கலத்தை உயரமான அபோலூன் (சந்திரனில் இருந்து வெகு தொலைவில் உள்ள புள்ளி) மீது வைக்கும், இஸ்ரோ உயரத்தை 100 கிமீ x 100 கிமீ வட்டச் சுற்றுப் பாதையில் குறைக்க பல முன்கூட்டிய (நெருக்கமான புள்ளி)

கையாளுதல்களைச் செய்யும். இறுதி இறங்கு கட்டத்திற்கு முன் ஐந்து சந்திர – பிணைப்பு கையாளுதல்கள்இருக்கலாம் என்று ஒரு விஞ்ஞானி கூறினார்.

சந்திரயான் -3, 100 கிமீ x 100 கிமீ சுற்றுப் பாதையை அடைந்த பிறகு லேண்டர் தொகுதி (விக்ரம் மற்றும் பிரக்யான்) உந்து விசை முறையில் இருந்து பிரிக்கப்படும்.

டீ பூஸ்ட், ப்ரீ – லேண்டிங் (ஊக்கத்தைக் குறைத்தல், தரையிறங்குவதற்கு முன்) மற்றும் தரையிறங்குதல் (கட்டம் 6 - 9)

பிரிக்கப்பட்ட பின்னர், லேண்டர் மாட்யூல் 100 கிமீ x 30 கிமீ சுற்றுப் பாதைக்குக் கொண்டு வரப்படும். அந்த மாடியூலிலிருந்து டீபூஸ்ட மற்றும் இறுதி இறங்குதல் ஆகஸ்ட் 23 அன்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது மிகவும் சவாலான கட்டமாக இருக்கும்.

சந்திரன் - சென்ட்ரிக் இயல்பான சுற்றுப்பாதை கட்டம் (கட்டம் 10):
தரையிறங்கிய பின், உந்துவிசை தொகுதிகளின் சுற்றுப்பாதையை இயல்பாக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

## ➢ சாகர் சம்பர்க் (Sagar Sampark)

- ✓ ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்தா சோனோவால், ஜூலை 12 அன்று ‘சாகர் சாம்பர்க்’ எனப்படும் உள்நாட்டு வேறுபட்ட உலகளாவிய ஊடுருவன் செயற்கைக்கோள் அமைப்பை (Differential Global Navigation Satellite System) சமீபத்தில் தொடங்கி வைத்தார்.



- ✓ இது ‘உலகளாவிய வழிசெலுத்துதல் செயற்கைக் கோள் அமைப்பில் பிழைகள் மற்றும் தவறுகளைச் சரிசெய்து மேலும் துல்லியமான நிலைப்படுத்துதல் தகவலை வழங்கும்’ ஒரு விரிவாக்க அமைப்பு ஆகும்.
- ✓ சாகர் சம்பர்க் நாடு முழுவதும் ஆறு இடங்களில் தொடங்கப்பட்டுள்ளது.
- ✓ இது கடல்வழி செலுத்தலுக்கான கப்பல்களுக்கு ரேடியோ உதவிகளை வழங்க கலங்கரை விளக்கங்கள் மற்றும் லைட் ஷிப்களின் இயக்குநர் ஜெனருக்கு உதவும்.

## ➢ துருவ செயற்கைக் கோள் செலுத்து வாகனம் (Polar Satellite Launch Vehicle)

- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் - ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டா விண்கலத்தில் உள்ள முதல் ஏவுதளத்தில் இருந்து துருவ செயற்கைக் கோள் ஏவுகணை

மூலம் ஏழு சிங்கப்பூர் செயற்கைக் கோள்களை ஜூலை 30 ஆம் தேதி விண்ணில் செலுத்தியது.

- ✓ விண்வெளி முகமையின் கூற்றுப்படி, ‘பிஎஸ்எல்வி-சி56’ என்று பெயரிடப்பட்ட பிஎஸ்எல்வி ராக்கெட், சுமார் 360 கிலோ எடையுள்ள சிங்கப்பூரின் டிஎஸ்-சார் செயற்கைக் கோளை முக்கிய பயணியாக சுமந்து செல்லும்.

## ➢ உலக நாணயம் (Worldcoin)

- ✓ ஓபன்ஏஐ நிறுவன தலைமை நிர்வாக அதிகாரியாகிய சாம் ஆல்ட்மேன் ஜூலை 24 அன்று ஒரு இலட்சிய கிரிப்டோகரன்சி திட்டமான ‘வேர்ல்ட்காயின்’ ஐ தொடங்கினார்.




- ✓ இந்த உலக நாணய திட்ட சுற்றுச் சூழல் அமைப்பு மூன்று முக்கிய கூறுகளை உள்ளடக்கியது – வேர்ல்டு ஐடி, வேர்ல்டு காயின் டோக்கன் மற்றும் வேர்ல்டு ஆப் (World ID, Worldcoin token (WLD),World App) ஆகும்.
- ✓ உலக நாணய டிஜிட்டல் நாணயமானது உலக செயலி எனப்படும் வேர்ல்டு-ஐடி இணக்கமான செயலிமூலம் பரிவர்த்தனைகள் மற்றும் பணம் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படலாம்.
- ✓ இந்த உலக நாணயத்தின் முதன்மை சாதனமான ஆர்ப் (Orb) மற்றும் அதன் சேவைகள் வரும் மாதங்களில் 20 நாடுகளில் உள்ள 35 நகரங்களில் வெளியிடப்படும்.

## ➢ எல்லைப்புற மாதிரி மன்றம் (Frontier Model Forum)

- ✓ செயற்கை நுண்ணறிவை ஆராய்ச்சி செய்யும் நான்கு தொழில்நுட்ப நிறுவனங்கள் - ஆந்த்ரோபிக், கூகுள், மைக்ரோசாப்ட் மற்றும் ஓபன்ஏஐ – ஆகியவை ‘எல்லைப்புற மாதிரி மன்றம்’ என்ற ஒரு புதிய தொழில்துறை அமைப்பை அறிவித்துள்ளன.
- ✓ செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் உருவாக்கப்பட்டு வருவதால் பாதுகாப்பு மற்றும் பொறுப்பை உறுதிப்படுத்த புதிய அமைப்பு ஒரு கண்காணிப்பாளராக செயல்படும்.
- ✓ இந்தக் குழுவானது தொழில்நுட்ப மதிப்பீடுகளில் கவனம் செலுத்துவதோடு, தொழில்துறையில் சிறந்த நடைமுறைகள் மற்றும் தரநிலைகளை ஆதரிக்கும் அளவுகோல்களை அமைக்கும்.

## ➢ சிங்கப்பூரின் செயற்கைக்கோள்கள்

- ✓ ஜூலை 30அன்று, இஸ்ரோ - ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து ஏழு சிங்கப்பூர் செயற்கைக் கோள்களை சுமந்துகொண்டு தனது பிஎஸ்எல்வி ராக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது மற்றும் அவற்றை பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள சுற்றுப் பாதையில் நிலைநிறுத்தியது.
- ✓ இஸ்ரோவின் இந்தப் பணியை அதன் வணிகப் பிரிவான நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (NewSpace India Limited) மேற்கொள்கிறது.



- இஸ்ரோவின் பிஎஸ்எல்வி – சி56, சிங்கப்பூரின் டிஎஸ்-எஸ்ஏஆர் மற்றும் 6 இணை-பயணிகள் செயற்கைக் கோள்களை சுமந்து சென்றது.
- 360 கிலோ எடையுள்ள இந்த டிஎஸ்-எஸ்ஏஆர் செயற்கைக்கோள், 535 கிமீ உயரத்தில் 5 டிகிரி சாய்வில் நிலைநிறுத்தப்பட்டால், சிங்கப்பூர் அரசில் உள்ள பல்வேறு நிறுவனங்களின் செயற்கைக்கோள்படத் தேவைகளை ஆதரிக்க ஏதுவாகும்.

APOLLO STUDY CENTRE

# விளையாட்டு

➢ **ஆசிய சாம்பியன்ஷிப் - கபடி**

✓ ஜூன் 30 அன்று கொரிய குடியரசின் பசானில் உள்ள டோங் - ஈயுப் தொழில்நுட்ப நிறுவன சியோக்டாங் கலாச்சார மையத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்திய ஆடவர் கபடி அணி - ஈரானை தோற்கடித்து ஆசிய சாம்பியன்ஷிப் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டது.




✓ இந்திய கேப்டன் பவன் செஹ்ராவத் சூப்பர் 10 ரன்களுடன் முன்னணியில் இருந்து விளையாடினார்.

✓ முன்னதாக, இந்தியா ஹாங்காங்கை வீழ்த்தி போட்டியின் லீக் கட்டத்தை தோல்வியின்றி முடித்திருந்தது.

✓ இது கான்டினென்டல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் எட்டாவது பட்டமாகும்.

➢ **SAFF சாம்பியன்ஷிப் 2023 இறுதிப் போட்டிகள்:**

✓ பெங்களூரு ஸ்ரீகண்டீரவா மைதானத்தில் நடைபெற்ற SAFF சாம்பியன்ஷிப் 2023 பட்டத்தை, இந்திய ஆண்கள் காலபந்து அணி, குவைத்துக்கு எதிரான பரபரப்பான பெனால்டி ஷூட் அவுட்டில் 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

✓ சமீபத்திய ∴பீ∴பா தரவரிசையில் 100வது இடத்தில் உள்ள இந்தியா, 14 பதிப்புகளில் ஒன்பதாவது SAFF சாம்பியன்ஷிப்பில் வெற்றி பெற்றது.

➢ **கனடா ஓபன் 2023**

✓ இந்திய பேட்மிண்டன் வீரர் லக்ஷ்யா சென் - ஜூலை 9 அன்று கால்கரியில் நடைபெற்ற கனடா ஓபன் 2023 போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சீனாவில் ஆல் இங்கிலாந்து சாம்பியனான லி ஷி ∴பெங்கை நேர் செட்களில் தோற்கடித்து பட்டத்தை வென்றார்.



- ✓ இந்த வெற்றியானது, 2022 ஜனவரியில் ஏற்கனவே இந்தியா ஓபனை வென்றிருந்த லக்ஷ்யாவின் இரண்டாவது பிடபிள்யூஎப் உலக டூர் சூப்பர் 500 பட்டத்தைக் குறிக்கிறது.
- ✓ கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பர்மிங்ஹாம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற பிறகு சென்னின் முதல் பட்டம் இதுவாகும்.

**விளம்பிள்டன் - 2023**

- ✓ செக் குடியரசின் தரவரிசை பெறாத மார்கெட்டா வோண்ட்ரூசோவா – ஜூலை 15 அன்று 2023 விம்பிள்டன் இறுதிப் போட்டியில் தனது வாழ்க்கையின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார்.



- ✓ சென்டர் கோர்ட்டில் 80 நிமிடங்கள் நீடித்த இறுதிப் போட்டியில் உலக தரவரிசையில் 42-வது இடத்தில் உள்ள வோண்ட்ரூசோவா, துனிசியாவின் 6வது நிலை வீரரான ஒன்ஸ் ஜாபியூரை வீழ்த்தி வெற்றி பெற்றார்.
- ✓ விம்பிள்டனில் அவரது சிறந்த வெற்றி, 2017 மற்றும் 2019க்கு இடையில் மூன்று முதல் சுற்றில் வெளியேறிய பிறகு 2021இல் இரண்டாவது சுற்றில் நுழைந்ததே ஆகும்.

- ➢ **விம்பிள்டன்**
- ✓ உலகின் நம்பர் 1 வீரர் கார்லோஸ் அல்கராஸ் - ஜூலை 16 அன்று, நான்கு முறை நடப்பு சாம்பியனான நோவக் ஜோகோவிச்சை ஐந்து செட் த்ரில்லில் தோற்கடித்து தனது முதல் விம்பிள்டன் பட்டத்தையும், ஒட்டுமொத்த இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் கோப்பையையும் வென்று சாதனை படைத்தார்.



- ✓ இந்த வெற்றியின்மூலம், கார்லோஸ் அல்கராஸ், விம்பிள்டனில் 24வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்திற்கு இணையான இதுவரை இல்லாத சாதனை, எட்டாவது பட்டத்தை சமன்

செய்வதற்கான ஒரு சாதனை மற்றும் ஐந்தாவது முறையாக விம்பிள்டன்னை வெல்லுதல் போன்ற சாதனைகளை எட்டுவதிலிருந்து நோவோக் ஜோகோவிச்சை தடுத்து நிறுத்தினார்.

- ✓ மானுவல் சந்தனா (1966) மற்றும் ர∴பேல் நடால் (2008, 2010) ஆகியோருக்குப் பிறகு விம்பிள்டன் கிராஸ் கோர்ட் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற மூன்றாவது ஸ்பானிஷ் வீரர் அல்கராஸ் ஆவார்.

➢ **ஆசிய விளையாட்டுப் போட்டிகள் - ஹாங்சோவ். சீனா**

- ✓ இந்தியா – செப்டம்பர் 20 முதல் அக்டோபர் 8 வரை சீன நகரமான ஹாங்சோவில் நடைபெறவிருக்கும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக இதுவரை இல்லாத வகையில் மிகப்பெரிய விளையாட்டு வீரர்கள் அணியை அனுப்ப உள்ளது.




- ✓ ஆசியாட் போட்டிக்கான நமது நாட்டு குழுவின் ஒரு பகுதியாக சுமார் 800 விளையாட்டு வீரர்கள் இந்திய ஒலிம்பிக் சங்கத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- ✓ 2108ஆம் ஆண்ட நடைபெற்ற ஜாகர்த்தா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக, 36 விளையாட்டுத் துறைகளில் 524 உறுப்பினர்கள் கொண்ட குழுவை இந்திய ஒலிம்பிக் சங்கம் அனுப்பியது.
- ✓ விளையாட்டு வீரர்களின் இறுதித் தேர்வைத் தொடர்ந்து, பயிற்சியாளர்கள் மற்றும் துணைப் பணியாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் - அவர்கள் மொத்த குழு அளவில் 33 விழுக்காடாக இருப்பார்கள்.

➢ **கின்னஸ் உலக சாதனை – அதிவேக வெற்றி**

- ✓ ஸ்டார் இந்தியா ஷட்லர் சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி – தனது அதிரடி தாக்குதல் மூலம் மனதைக் கவரும் வகையில் 565 கிமீ வேகத்தில் பதிவு செய்து, பேட்மிண்டனில் ஆண் வீரர் ஒருவரால் நிறைவேற்றப்பட்ட அதிவேகமான கின்னஸ் உலக சாதனையை படைத்துள்ளார்.



- ✓ மே 2013இல் மலேசியாவின் டான் பூன்ஹியோங்கின் அதிவேக சாதனையாகிய மணிக்கு 493 கிமீ என்ற சாதனையை சாத்விக் முறியடித்தார்.
- ✓ உலக சாதனை முயற்சிகள் ஏப்ரல் 14, 2023 அன்று எட்டப்பட்டன. மேலும் அன்றைய வேக அளவீட்டு முடிவுகளின் அடிப்படையில் கின்னஸ் உலக சாதனைகளில் இருந்து நீதிபதிகளால் சரிபார்க்கப்பட்டது.

## ➢ கொரியா ஓபன் பேட்மிண்டன் பட்டம்

- ✓ தென்கொரியாவின் யோசுவில் ஜூலை 23 அன்று நடைபெற்ற கொரிய ஓபன் பேட்மிண்டன் போட்டியின் இரட்டையர் பிரிவில் சாதவிக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோர் பட்டம் வென்றனர்.



- ✓ மூன்றாவதாகக் களமிறங்கிய இந்த வீரர்கள், உலகின் நம்பர் 1 ஃபஜர் அல்ஃபியன் மற்றும் இந்தோனேசியாவின் முஹம்மது ரியான் அர்டியான்டோ ஆகியோரை மூன்று செட்களில் தோற்கடித்ததன் மூலம் இந்த ஆண்டின் நான்காவது பட்டத்தையும் கொரியாவில் முதல் பட்டத்தையும் வென்றனர்.
- ✓ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளி வென்ற மற்றும் உலக சாம்பியன்ஷிப்பில் இரண்டு முறை வெண்கலப் பதக்கம் வென்ற இந்தோனேசியர்களுக்கு எதிராக இந்திய ஜோடியின் மூன்றாவது தொடர்ச்சியான வெற்றி இதுவாகும்.

## ➢ உலக நீர்விளையாட்டுகள் சாம்பியன்ஷிப் 2023

- ✓ 2023 உலக நீர்விளையாட்டுகள் சாம்பியன்ஷிப் போட்டிகள் ஜப்பானின் ஃபுகுவோகாவில் ஜூலை 14 முதல் 30 வரை நடைபெறுகின்றன.
- ✓ ஃபுகுவோகா 2023இல் ஐந்து திறந்த நீர் நிகழ்வுகளுடன் போட்டிகள் தொடங்கும். மரைன் மெஸ்லே குளத்தில் எட்டு போட்டி நாட்களுடன் நீச்சல் போட்டிகள் நடைபெறும்.

# நினைவில் நின்றவர்கள்

- **மிலன் குந்தேரா (Milan Kundera)**



- ✓ 1984இல் அவரது தலைசிறந்த படைப்பான '"The Unbearable Lightness of Being" என்ற வெளியீட்டின்மூலம், குந்தேராவின் சர்வதேச புகழ் உயர்ந்தது.
- ✓ இந்த நாவல் பின்னாளில் ஒரு வெற்றிகரமான திரைப்படமாக மாற்றப்பட்டது. இதில் ஜூலியட் பினோச் மற்றும் டேலூயிஸ் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்தனர்.
- ✓ 2019ஆம் ஆண்டில், அவரது செக் குடியுரிமை மீட்டெடுக்கப்பட்டது. இது அவர் தாயகத்திற்குத் திரும்புவதைக் குறிக்கும் குறிப்பிடத்தக்க அடையாளச் சைகையாகும்.
- ✓ 1967இல், குந்தேரா தனது முதல் நாவலான 'தி ஜோக்' வெளியீட்டின்மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தார்.

APP STUDY CENTRE


# தரவரிசைப் பட்டியல்

- **ஃபோர்ப்ஸ் பத்திரிகையின் 100 பணக்கார பெண்கள் பட்டியலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நான்கு தலைவர்கள் இடம்பெற்றுள்ளனர்.**



- ✓ அமெரிக்காவின் 100 வெற்றிகரமான பெண்களின் ஃபோர்ப்ஸ் 2023 பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. நான்கு இந்திய வம்சாவளி பெண்களான ஜெயஶ்ரீ உல்லால், இந்திரா நூயி, நேஹா நர்கடே மற்றும் நீர்ஜா சேத்தி ஆகியோர் அமெரிக்காவின் 100 பணக்கார பெண்களின் இந்த விரும்பத்தக்க பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.
- ✓ ஜெய்ஶ்ரீ உல்லால் மற்றும் இந்திரா நூயி உட்பட நான்கு இந்திய வம்சாவளி பெண்கள், அமெரிக்காவின் மிக வெற்றிகரமான 100 சுய உருவாக்கம் பெற்ற பெண்களின் ஃபோர்ப்ஸ் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர். இவர்களின் மொத்த நிகர மதிப்பு 4.06 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்.

- **2022ஆம் ஆண்டுக்கான ஏற்றுமதி தயார்நிலைக் குறியீடு**
- ✓ ஜூலை 17 அன்று, புதுதில்லியில் வெளியிடப்பட்ட நித்தி ஆயோக்கின் 2022ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதித் தயார்நிலைக் குறியீட்டில் தமிழ்நாடு – முதலிடத்தைப் பிடித்துள்ளது.




- ✓ தமிழ்நாடு 2021இல் நான்காவது இடத்திலும், 2020இல் மூன்றாவது இடத்திலும் இருந்தது.

- ✓ ஏற்றுமதித் தயார்நிலை குறியீடு 2022 அறிக்கையானது, கொள்கை, வணிக சுற்றுச் சூழல், ஏற்றுமதி சுற்றுச் சூழல் மற்றும் ஏற்றுமதி செயல்திறன் ஆகிய நான்கு அளவுருக்களில் மாநிலங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்தது.
- ✓ ஏற்றுமதி தயார்நிலைக் குறியீடு 2022இன்படி, ஒட்டுமொத்தமாக 80.89 மதிப்பெண்களுடன் தமிழ்நாடு முதலிடத்திலும், மகாராஷ்டிரா 78.20 மதிப்பெண்களுடன் இரண்டாவது இடத்திலும், கர்நாடகா 76.36 மதிப்பெண்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

## ➢ ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு 2023 (Henley Passport Index 2023)




- ✓ ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டின்படி, சிங்கப்பூர் இப்போது உலகின் மிக சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் என்ற பட்டத்தைப் பெற்றுள்ளது. 227 உலகளாவிய பயண இடங்களில் 192 இடங்களுக்கு விசா இல்லாத அணுகலை இந்த கடவுச்சீட்டு அனுமதிக்கிறது.
- ✓ ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு 2023இல், கடந்த ஆண்டில் 87வது இடத்தில் இருந்த இந்தியா, ஏழு இடங்கள் முன்னேறி 80வது இடத்திற்கு வந்துள்ளது.
- ✓ ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஸ்பெயின் ஆகிய மூன்று ஐரோப்பிய நாடுகள் ஒரு தரவரிசை முன்னேறி இரண்டாவது இடத்தைப் பகிர்ந்து கொண்டன. இதன்மூலம் 190 இடங்களுக்கு விசாத இல்லாத அணுகலைப் பெற முடியும்.
- ✓ ஐந்தாண்டுகளில் முதல் முறையாக, ஜப்பான் முதல் இடத்திலிருந்து அகற்றப்பட்டு, இப்போது மூன்றாவது இடத்தில் உள்ளது. அதன் கடவுச் சீட்டு, 189 இடங்களுக்கு விசா இல்லாத அணுகலை வழங்குகிறது.

# அறிக்கைகள்

## ➢ பொருளாதாரம் மற்றும் அமைதி (Economics and Peace) அறிக்கை

- ✓ 2 ஜூலை 2023 அன்று பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனம் (Institute for Economics and Peace) வெளியிட்ட 'உலகளாவிய அமைதிக் குறியீடு 2023' அறிக்கையின்படி, ஆப்கானிஸ்தான் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக உலகின் மிகவும் அமைதி குறைந்த நாடாக விளங்குகிறது.
- ✓ ஏமன், சிரியா, ரஷ்யா மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்கு அடுத்ததாக கடைசி இடத்தில் ஆப்கானிஸ்தான் உள்ளது.
- ✓ உலக அமைதிக் குறியீட்டில் மொத்தம் உள்ள 163 நாடுகளில் இந்தியா 126வது இடத்தில் உள்ளது.

## ➢ இந்தியா – 2075இல் 2 வது பெரிய பொருளாதாரமாக விளங்கும்




- ✓ கோல்ட்மேன் சாக்ஸ் ஆய்வாளர்கள், 2075 வாக்கில் இந்தியா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக மாறும் என்று கணித்துள்ளனர்.
- ✓ 2075 ஆம் ஆண்டிற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியா 52.5 டிரில்லியன் டாலர்களை எட்டி அமெரிக்காவை மிஞ்சும் என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.
- ✓ 2030 வாக்கில் அமெரிக்காவை முந்தி மிகப்பெரிய பொருளாதாரமாக சீனா மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ➢ இந்தியாவின் மின்சார வாகனங்கள்

### அரசு திட்டங்களை இனிப்பாக்கும் ஒப்பந்தம்

உள்நாட்டு டாடா மோட்டார்ஸ் மற்றும் மஹிந்திரா முதல் கியா மற்றும் எம்ஜி போன்ற வெளிநாட்டு நிறுவனங்கள் வரை வாகன உற்பத்தியாளர்கள் தங்கள் மின் வாகன வரிசையை விரிவுபடுத்துவதில் ஆச்சரியமில்லை. இவற்றில் சில இப்போது மலிவு விலையில் கார் பிரிவில் கிடைக்கின்றன. இதற்கிடையில், மின்சார இரு சக்கர வாகன சந்தையில், வாங்குவோருக்கு விருப்பமான வாகனங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. இதற்குக் காரணமாக மூன்று திட்டங்களின் மூலம் வாங்குபவர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் கனரக தொழில் அமைச்சகம் வழங்கும் சில சலுகைகள் விளங்குகின்றன.

புகழ்: இந்தியாவில் கலப்பு மற்றும் மின்சார வாகனங்களை விரைவாக தத்தெடுப்பு மற்றும் உற்பத்தி செய்யும் திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஏப்ரல் 2019 முதல் செயல்படுத்தப்பட்டு

வருகிறது. மேலும், மின்சார வாகனங்களை வாங்குபவர்களுக்கு கொள்முதல் விலையில் மானியம் வழங்கப்படுகிறது. இந்த ஊக்கத் தொகை பேட்டரி திறனுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது மூன்று சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கான வாகனத்தின் விலையில் 20 விழுக்காடு மற்றும் இரு சக்கர வாகனங்களுக்கு 40 விழுக்காடு என வரையறுக்கப்பட்டுள்ளது. மின்சார இரு சக்கர வாகனங்களுக்கு ஒரு KWh பேட்டரி திறனுக்கு ரூ.15,000 மற்றும் மூன்று சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு ரூ.10,000 மானியம் வழங்கப்படுகிறது.

பிஎல்ஐ திட்டம்: ஒன்றிய அரசின் வாகனத்துறைக்கான உற்பத்தி இணைந்த ஊக்கத் திட்டம், மின்சார வாகனங்கள் உட்பட வாகனங்களின் உள்நாட்டு உற்பத்தியை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஏசிசி திட்டம்: நவீன மின்சார வாகனத்தின் இதயம் அதன் பேட்டரி என்பதால், அரசின் மேம்பட்ட வேதியியல் கலத்திற்கான பிஎல்ஐ திட்டம், நாட்டில் 50 GWh ACC பேட்டரி உற்பத்தித் திறனை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**மாநிலங்களின் நிலை**

இந்தச் சலுகைகள் மற்றும் மின்சார வாகனங்களின் விற்பனையில் வளர்ச்சி இருந்தபோதிலும், சார்ஜிங் உள்கட்டமைப்பு மெதுவாக வளர்ந்துள்ளது. வருவாயை ஈட்டுவதில் இந்த வணிகம் போராடியதால், கோவிட்-19 தொற்று நோய் அதை மேலும் குறைத்தது. ஒட்டு மொத்தமாக, ∴பேம் திட்டத்தின் முதல் கட்டத்தில், அனுமதிக்கப்பட்டதைவிட அதிகமான பொது சார்ஜிங் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

## ➢ உலகளாவிய பல் பரிமாண வறுமைக் குறியீடு (Global Multidimensional Poverty Index)

- ✓ சமீபத்திய உலகளாவிய பல் பரிமாண வறுமைக் குறியீட்டின்படி, இந்தியாவில் 2005 முதல் 2021 வரையிலான 15 ஆண்டுகளுக்குள் சுமார் 415 மில்லியன் மக்கள் வறுமையிலிருந்து வெளியேறியுள்ளனர்.
- ✓ 15 ஆண்டுகளில் உலகளாவிய பல் பரிமாண வறுமைக் குறியீட்டு மதிப்புகளை பாதியாகக் குறைத்த 25 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- ✓ உலகளாவிய பல் பரிமாண வறுமைக் குறயீடானது வறுமைக் குறைப்பு மற்றும் மக்கள் தங்கள் அன்றாட வாழ்வின் வெவ்வேறு அம்சங்களில் வறுமையை எவ்வாறு அனுபவிக்கிறார்கள் அதாவது கல்வி மற்றும் சுகாதாரம், வீட்டு வசதி, குடிநீர், சுகாதாரம் மற்றும் மின்சாரம் போன்ற வாழ்க்கைத் தரம் வரை எவ்வாறு அனுபவிக்கிறார்கள் என்பதை கண்காணிக்கிறது.
- ✓ குறிப்பிடத்தக்க வகையில், இந்தியாவில் 2005-2006இல் 55 விழுக்காடு (645 மில்லியன்) ஆக இருந்த வறுமையின் நிகழ்வு 2019-2021இல் 16 விழுக்காடு (230 மில்லியன்) ஆகக் குறைந்துள்ளது.

## ➢ பல் பரிமாண வறுமை (Multi-Dimensional Poverty)

- ✓ இந்தியாவில் 2015-16 மற்றும் 2019-21க்கு இடையில் கிட்டத்தட்ட 13.5 கோடி மக்கள் பல் பரிமாண வறுமையிலிருந்து வெளியேறியுள்ளனர்.
- ✓ பீகார் மாநிலம் 2வது, மத்தியப் பிரதேசம் அடுத்தது.
- ✓ 2015-16.இல் 24.8 விழுக்காடாக இருந்த இந்தியாவின் பல்பரிமாண எழைகளின் எண்ணிக்கை, 2019-20இல் 14.9 விழுக்காடாகக் குறைந்துள்ளது: நித்தி ஆயோக் அறிக்கை.

- ✓ கிராமங்களில் ஏழைகளின் எண்ணிக்கை 32.5 விழுக்காட்டிலிருந்து 19.3 விழுக்காடு ஆக குறைந்துள்ளது. நகர்ப்புறங்களில், இந்த எண்ணிக்கை 8.7 விழுக்காட்டிலிருந்து 5.3 விழுக்காடு ஆகக் குறைந்துள்ளது.
- ✓ அனைத்து 12 குறிகாட்டிகளும் முன்னேற்றங்களைக் காட்டுகின்றன. பீகார், மத்தியப் பிரதேசம், ஒடிசா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்கள், உத்தரப் பிரதேசத்திற்குப் பிறகு ஏழைகளின் எண்ணிக்கையில் மிகக் கடுமையான வீழ்ச்சியை அடைந்துள்ளன.

- ✓ இது ஜூலை 17 அன்று ஒன்றிய அரசின் சிந்தனைக் குழுவான நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- ✓ 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மற்றும் 707 மாவட்டங்களுக்கான பல் பரிமாண வறுமை மதிப்பீடுகளை இந்த அறிக்கை வழங்குகிறது.
- ✓ இது 2030 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவை விட நிலையான வளர்ச்சி இலக்குகளை 1.2 (பல் பரிமாண வறுமையைக் குறைந்தது பாதியாகக் குறைக்கும்) அடையும் பாதையில் இந்தியாவை அமைத்துள்ளது.
- ✓ தேசிய பல் பரிமாண வறுமைக் குறியீடு 12 நிலையான வளர்ச்சி இலக்குகளால் சீரமைக்கப்பட்ட குறிகாட்டிகளால் குறப்பிடப்படும் உடல்நலம், கல்வி மற்றும் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் உள்ள பற்றாக்குறைகளை அளவிடுகிறது.

➢ **புலிகளின் நிலை**

- ✓ ஜூலை 29 அன்று சர்வதேச புலிகள் தினத்தையொட்டி உத்தரகாண்டின் கார்ப்பெட் புலிகள் காப்பகத்தில் 'புலிகளின் நிலை: இந்தியாவில் இணை வேட்டையாடுபவர்கள் மற்றும் இரைகள் - 2022' அறிக்கையை ஒன்றிய சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சர் அஷ்வினி குமார் சேளபே வெளியிட்டார்.




- ✓ இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் இப்போது 3,682 புலிகள் உள்ளன. இது 2018இல் 2967 ஆக இருந்தது – நான்கு ஆண்டுகளில் கிட்டத்தட்ட 24 விழுக்காடு அதிகரித்துள்ளது.
- ✓ இதன்மூலம் இந்தியா இப்போது உலகின் புலிகளின் எண்ணிக்கையில் தோராயமாக 75 விழுக்காடு புலிகளைக் கொண்டுள்ளது.
- ✓ மாநிலங்களைப் பொறுத்த மட்டில், மத்தியப் பிரதேசத்தில் (785) அதிக புலிகள் உள்ளன.
- ✓ தமிழ்நாட்டில் புலிகளின் எண்ணிக்கை 2018 இல் 264 ஆக இருந்தது 2022.இல் 306 ஆக உயர்ந்துள்ளது என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| ஜூலை 01 | தேசிய மருத்துவர்கள் தினம் | 2023 மையக் கருத்து: 'மீள் தன்மை மற்றும் குணப்படுத்தும் கைகளைக் கொண்டாடுதல்' |
| ஜூலை 01 | தேசிய அஞ்சல் ஊழியர்கள் தினம் | அஞ்சல் ஊழியர்களின் அயராத முயற்சிகளை அங்கீகரிக்கவும் நன்றி தெரிவிக்கவும் ஒரு வழியாக தேசிய அஞ்சல் ஊழியர் தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| ஜூலை 01 | பட்டய கணக்காளர்கள் தினம் | இந்தியாவின் மிகப் பழமையான மற்றும் மிகவும் மதிப்புமிக்க நிதி மற்றும் கணக்கியல் அமைப்பான ஐசிஏஐ (ICAI,) வழங்கிய பங்களிப்புகளை இந்த குறிப்பிடத்தக்க நாள் அங்கீகரிக்கிறது. |
| ஜூலை 01 | தேசிய அஞ்சல் தலை தினம் | தபால் தலைகளின் வரலாற்றையும் முக்கியத்துவத்தையும் கொண்டாடும் நாள் |
| ஜூலை 01 | சர்வதேச கூட்டுறவு தினம் | 2023ஆம் ஆண்டின் சர்வதேச கூட்டுறவு தினத்தின் கருப்பொருள், 'நிலையான வளர்ச்சிக்கான கூட்டுறவுகள்' என்பதாகும். |
| ஜூலை 02 | உலக விளையாட்டு பத்திரிகையாளர்கள் தினம் | விளையாட்டுப் பத்திரிகையாளர்களின் பணியைக் கொண்டாடவும், விளையாட்டு அறிக்கையிடலின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒரு நாள். |
| ஜூலை 02 | உலக யுஎப்ஓ தினம் | விவரிக்கப்படாதவற்றைக் கொண்டாடவும், அடையாளம் தெரியாத பறக்கும் பொருட்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒரு நாள் |
| ஜூலை 02 | உலக விளையாட்டு பத்திரிகையாளர்கள் தினம் | விளையாட்டு ஊடக வல்லுநர்களின் சாதனைகளைப் போற்றும் நாள். |
| ஜூலை 03 | சர்வதேச பிளாஸ்டிக் பை இல்லாத தினம் | உலக அளவில் தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் வணிகங்கள் பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டைக் குறைக்கவும் மேலும் நிலையான மாற்று வழிகளை ஆராயவும் இந்த நாள் நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. |
| ஜூலை 04 | அமெரிக்காவின் சுதந்திர தினம் | இந்த நாள் அமெரிக்காவின் தேசிய தினமாகக் கருதப்படுகிறது. |
| ஜூலை 06 | உலக ஜூனோசிஸ் தினம் | உலக உயிரியல் பூங்காக்கள் தினம் பல்வேறு விலங்கியல் நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு தளமாகச் செயல்படுகிறது. |
| ஜூலை 07 | உலக சாக்லேட் தினம | இந்த நாளில், அனைத்து வயதையும் சார்ந்த சாக்லேட் ஆர்வலர்கள் |

| | | |
|---|---|---|
| | | தங்களுக்குப் பிடித்த விருந்துகளை ருசிப்பதற்காக ஒன்று கூடுகிறார்கள். |
| ஜூலை 10 | தேசிய மீன் விவசாயிகள் தினம் | மீன் வளர்ப்பாளர்கள், மீன் வளர்ப்பு தொழில் வல்லுநர்கள் ஆற்றிய முக்கிய பங்கைப் பாராட்டுவதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. |
| ஜூலை 11 | உலக மக்கள் தொகை தினம் | மையக் கருத்து 2023 – ‘பாலின சமத்துவத்தின் சக்தியை கட்டவிழ்த்து விடுதல்: நமது உலகின் எல்லையற்ற சாத்தியக்கூறுகளைத் திறக்க பெண்கள் மற்றும் சிறுமிகளின் குரல்களை உயர்த்துதல்’ |
| ஜூலை 12 | சர்வதேச மலாலா தினம் | பெண் கல்விக்காக வாதிடும் பாகிஸ்தானியரும். நோபல் பரிசு பெற்ற இளைய நபருமான மலாலா யூசுப்சாயின் துணிச்சலுக்கும், செயல்பாட்டிற்கும் மதிப்பளிக்கும் வகையில் அனுசரிக்கப்படுகிறது. |
| ஜூலை 12 | மணல் மற்றும் தூசி புயல்களை எதிர்ப்பதற்கான சர்வதேச தினம் | நீடித்த வளர்ச்சி இலக்குகளின் தீவிர சுற்றுச் சூழல், பொருளாதாரம் மற்றும் சமூக பாதிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. |
| ஜூலை 12 | உலக காகிதப்பை தினம் | பிளாஸ்டிக்கிற்குப் பதிலாக காகிதப் பைகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. |
| ஜூலை 12 | நபார்டு நிறுவன தினம் | விவசாயம் மற்றும் கிராமப்புறத் துறைகளுக்கு நிதி மற்றும் மேம்பாட்டு ஆதரவை வழங்குவதற்காக 1982இல் நபார்டு நிறுவப்பட்டது. |
| ஜூலை 15 | உலக இளைஞர் திறன் தினம் | 2023ஆம் ஆண்டின் உலக இளைஞர் திறன்கள் தினத்தின் கருப்பொருள். மாற்றுத் திறனாளி எதிர்காலத்திற்கான திறமையான ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கு திறன் அளித்தல் என்பதாகும். |
| ஜூலை 17 | சர்வதேச நீதிக்கான உலக தினம் | இந்த நாளில், உலகெங்கிலும் உள்ள மக்கள் நீதிக்காக நிற்கிறார்கள், பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்காக வாதிடுகிறார்கள். |
| ஜூலை 18 | நெல்சன் மண்டேலா சர்வதேச தினம் | 1994 முதல் 1999 வரை முதல் அதிபராகப் பணியாற்றிய தென்னாப்பிரிக்காவின் நிறவெறி எதிர்ப்பு ஆர்வலரான நெல்சன் மண்டேலாவைக் கௌரவிக்கும் வகையில் அனுசரிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| ஜூலை 18 | தமிழ்நாடு தினம் | 1967 ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் தேதி முன்னாள் முதலமைச்சர் சி.என். அண்ணாதுரை அவர்களால் மெட்ராஸ் மாகாணத்தின் பெயரை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. |
| ஜூலை 18 | சர்வதேச நெல்சன் மண்டேலா தினம | 2023ஆம் ஆண்டிற்கான மையக் கருத்து, 'உங்கள் மூலம் மரபு வாழ்கிறது: காலநிலை, உணவு மற்றும் ஒற்றுமை.' |
| ஜூலை 20 | உலக செஸ் தினம் | சர்வதேச செஸ் தினத்தின் 2023ஆம் ஆண்டின் மையக் கருத்து. இந்த விளையாட்டை உலகளாவியதாகவும், அனைவருக்கும் அணுகக் கூடியதாகவும் மாற்றுவதில் கவனம் செலுத்துகிறது. |
| ஜூலை 20 | சர்வதேச நிலவு தினம் | சர்வதேச நிலவு தினம் என்பது பூமியின் ஒரே ஒரு இயற்கை செயற்கைக் கோளான சந்திரனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வருடாந்திர நாள் ஆகும். |
| ஜூலை 22 | பை தோராய நாள் | பை தோராய நாள் ஜூலை 22 அன்று அனுசரிக்கப்படுகிறத (நாள் - மாத தேதி வடிவத்தில் 22/7). பின்னம் 22/7 என்பது பை-ன் பொதுவான தோராயமாகும். |
| ஜூலை 22 | உலக மூளை தினம் | உலக மூளை தினத்தின் கருப்பொருள், 'மூளை ஆரோக்கியம் மற்றும் இயலாமை: யாரையும் பின்னால் விட்டுவிடக்கூடாது' என்பதாகும். |
| ஜூலை 22 | தேசிய மாம்பழ தினம் | இந்திய வரலாறு மற்றும் கலாச்சாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும் மாம்பழம் அனைவராலும் விரும்பப்படும் இந்திய பழங்களில் ஒன்றாகும். இது பழங்களின் ராஜா என்றும் அழைக்கப்படுகிறது. |
| ஜூலை 23 | தேசிய ஒலிபரப்பு தினம் | இந்த குறிப்பிடத்தக்க நாள் இந்தியாவின் முதல் வானொலி ஒலிபரப்பின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இது ஆல் இந்திய ரேடியோ என்று அழைக்கப்படுகிறது. |
| ஜூலை - 23 | பெற்றோர் தினம் | பெற்றோரின் தன்னலமற்ற தன்மையை அங்கீகரிப்பதற்காகவும், பாராட்டுவதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்ட சிறப்பு சந்தர்ப்பம் ஆகும். |
| ஜூலை - 24 | ஆய்கர் திவாஸ் அல்லது வருமானவரி தினம் | நாட்டில் வருமான வரி விதிப்பு அறிமுகப்படுத்தப்பட்டதை நினைவுகூரும் வகையில் அனுசரிக்கப்படுகிறது..`. |
| ஜூலை - 25 | உலக நீரில் மூழ்கும் தடுப்பு நாள் | குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் நீரில் மூழ்குவதால் ஏற்படும் அழிவுகரமான மற்றும் நீடித்த விளைவுகள் பற்றிய |

| | | |
|---|---|---|
| | | விழிப்புணர்வை அதிகரிப்பதே இந்த நாள் அனுசரிப்பதன் நோக்கம் ஆகும். |
| ஜூலை - 26 | கார்கில் வெற்றி தினம் | 1999 ஆம் ஆண்டு கார்கில் போரின் போது பாகிஸ்தானுக்கு எதிரான குறிப்பிடத்தக்க இராணுவ வெற்றியான ஆபரேஷன் விஜயின் வெற்றியை நினைவுகூரும் நாள். |
| ஜூலை - 26 | சதுப்பு நில சுற்றுச் சூழல் அமைப்பின் பாதுகாப்புக்கான சர்வதேச தினம் | சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளின் முக்கியத்துவத்தை தனித்துவமான, விலைமதிப்பற்ற மற்றும் நுட்பமான சூழல்களாக உலகளாவிய புரிதலை அதிகரிப்பதே இதன் நோக்கம் ஆகும். |
| ஜூலை - 28 | உலக ஹெபடைடிஸ் தினம் | 2023ஆம் ஆண்டிற்கான மையக் கருத்து, ' ஒரு வாழ்க்கை ஒரு கல்லீரல்' என்பதாகும். |
| ஜூலை - 28 | உலக இயற்கை பாதுகாப்பு தினம் | 2023 உலக இயற்கை பாதுகாப்பு தினத்தின் கருப்பொருள், 'காடுகள் மற்றும் வாழ்வாதாரங்கள்: மக்களையும் கிரகத்தையும் நிலைநிறுத்துதல்' என்பதாகும். |
| ஜூலை - 29 | சர்வதேச புலிகள் தினம் | உலக அளவில் புலிகளின் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது. |
| ஜூலை - 30 | சர்வதேச நட்பு தினம் | இந்த சிறப்பு நாள் நமது நண்பர்களின் தோழமைக்கும் ஆதரவிற்கும் நன்றி தெரிவிக்க அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. |
| ஜூலை - 30 | ஆள் கடத்தலுக்கு எதிரான உலக தினம் | இந்த வருடத்தின் கருப்பொருள்' கடத்தலால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் அடையுங்கள், யாரையும் விட்டு விடாதீர்கள்' |
| ஜூலை - 31 | உலக ரேஞ்சர் தினம் | 2023ஆம் ஆண்டின் உலக ரேஞ்சர் தினத்தின் கருப்பொருள், 30க்கு 30 என்பதாகும். இது 2022ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் உயிரியல் பன்முகத் தன்மை மாநாட்டின் வேகத்தை அடிப்படையாகக் கொண்டது. |

# பல்வகை

➢ **இந்தியாவின் முதல் கஞ்சா மருந்து திட்டம்**



- ✓ சிஎஸ்ஐஆர் மற்றும் ஐஐஐஎம் ஜம்முவின் ‘கஞ்சா ஆராய்ச்சித் திட்டம், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில். இந்த வகையில் முதலாவது முயற்சி என்பதைக் குறிக்கிறது.
- ✓ மனித குலத்தின் நன்மைக்காக, குறிப்பாக நரம்பியல், புற்றுநோய் மற்றும் கால்-கை வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்காக, கஞ்சா என்று, துஷ்பிரயோகம் சாத்தியம் என்று அறியப்பட்ட இந்தப் பொருளின் திறனைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, கனடிய நிறுவனமான ‘இண்டஸ்கான்’ உடன் இணைந்து இந்த அற்புதமான திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

# CURRENT AFFAIRS - TNPSC ORIGINAL QUESTIONS & ANSWERS – EXAMS CONDUCTED IN MAY & JULY 2023

## ROAD INSPECTOR IN RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ DEPARTMENT IN TAMIL NADU PANCHAYAT DEVELOPMENT ENGINEERING SUBORDINATE SERVICE – 07/05/2023

## UNIT – II - CURRENT EVENTS

### Public awareness and General administration

1. The first batch of Women Military Police was inducted into the Indian army in ________

a. April 2021 **b. May 2021** c. June 2021
d. July 2021 e. Answer not known

இந்திய இராணுவத்தில் முதன்முதலாக பெண் இராணுவ போலீசார் எந்த ஆண்டு ________ சேர்க்கப்பட்டனர்.

a. ஏப்ரல் 2021 b. மே 2021 c. ஜூன் 2021
d. ஜூலை 2021 e. விடை தெரியவில்லை

### Profile of States

2. The Government of Tamil Nadu announced that 2713 Government ________ will get hi-tech computer labs.

a. Primary Schools **b. Middle Schools** c. Secondary Schools
d. Higher Secondary Schools e. Answer not known

2713 அரசு ___________ களுக்கு உயர்தர கணினி ஆய்வகங்கள் வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

a. ஆரம்பப் பள்ளி b. நடுநிலைப் பள்ளி c. மேல்நிலைப் பள்ளி
d. உயர்நிலைப் பள்ளி e. விடை தெரியவில்லை

### Eminent personalities and places in news

3. The British era bridge which collapsed in Morbi district is situated in which State?

a. Haryana b. Karnataka **c. Gujarat**
d. Madhya Pradesh e. Answer not known

மொர்பி மாவட்டத்தில் இடிந்து விழுந்த ஆங்கிலேயர் கால பாலம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

a. ஹரியானா b. கர்நாடகா c. குஜராத்

d. மத்திய பிரதேசம் e. விடை தெரியவில்லை

## Welfare oriented Government schemes and their utility

4. The erstwhile Mid-Day Meal Scheme is renamed as

a. UMANG b. Bhavishya c. POSCO

**d. PM-POSHAN** e. Answer not known

முந்தைய மதிய உணவு திட்டத்தின் மறு பெயர் யாது?

a. உமாங் b. பவிஷ்ய c. போஸ்கோ

d. PM– போஷன் e. விடை தெரியவில்லை

## Awards and Honours

5. Which among the 2022 Nobel laureates of Physics demonstrated quantum teleportation?

a. Alain Aspect b. John Clauser **c. Anton Zeilinger**

d. Didier Queloz e. Answer not known

2022 நோபல் பரிசினை இயற்பியலுக்காக வென்றவர்களின் 'குவாண்டம் தொலைத்தாங்கு நடைமுறையை' செய்து காட்டியவர் யார்?

a. அலைன் ஆசுபெக்ட் b. சான் கிளவுசர் c. அன்டன் சைலிங்கர்

d. திதியே கேலோ e. விடை தெரியவில்லை

## ASSISTANT JAILOR (MEN & WOMEN) (TAMIL NADU JAIL SUBORDINATE SERVICE) – 01/07/2023

## UNIT – II - CURRENT EVENTS
## Latest diary of events

1. India adds 11 more wetlands to the list of RAMSAR sites to make a total of _____ Ramsar sites covering an area of 13, 26,677 ha in the year 2022.

**a. 75** b. 79 c. 50 d. 56 e. Answer not known

2022 ஆம் ஆண்டில் நாட்டில் 13, 26, 677 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட ____________ ராம்சார் தளங்களை உருவாக்க இந்தியா மேலும் 11 ஈரநிலங்களை ராம்சார் தளங்களில் பட்டியலில் சேர்த்தது.

a. 75 b. 79 c. 50 d. 56 e. விடை தெரியவில்லை

## Awards & Honours

2. "Perarignar Anna Award" for the year 2021 was awarded to
   **a. Nanjil Sampath** b. Bharathi Krishna Kumar c. Dr. M.Rajendran
   d. Suki Sivam e. Answer not known
   2021-ம் ஆண்டிற்காக 'பேரறிஞர் அண்ணா விருது' யாருக்கு வழங்கப்பட்டது?
   a. நாஞ்சில் சம்பத் b. பாரதி கிருஷ்ணன் குமார் c. Dr. மு. ராஜேந்திரன்
   d. சுகி சிவம் e. விடை தெரியவில்லை

## Eminent personalities and places in news

3. "My sorrow and my wavering faith is not for myself alone, but for every woman who is struggling for justice in court". Who said this?
   a. Nirbaya **b. Bilkis Bano** c. Shah Bano
   d. Visaka e. Answer not known
   "என்னுடைய துயரமும் மற்றும் நீதி கிடைக்கும் என்ற நிலையற்ற நம்பிக்கையும் என்னுடையது மட்டுமல்ல மாறாக நீதிமன்றங்கள் மூலம் நீதி கிடைக்க வேண்டி போராடும் எல்லா பெண்களுடையது" என யார் கூறியது?
   a. நிர்பயா **b. பில்கிஸ் பானு** c. ஷா பானு
   d. விசாகா e. விடை தெரியவில்லை

4. When was Daman and Diu merged with Dadra and Nagar Haveli?
   a. January, 2019 b. December, 2019 **c. January, 2020**
   d. December, 2020 e. Answer not known
   டாமன் மற்றும் டையூ, எப்போது தாத்ரா மற்றும் நாகர் ஹவேலியுடன் இணைக்கப்பட்டது?
   a. 2019, ஜனவரி b. 2019, டிசம்பர் c. 2020, ஜனவரி
   d. 2020, டிசம்பர் e. விடை தெரியவில்லை

## Latest inventions in Science and Technology

5. Name the product for which the Agnikul Cosmos has secured first patent for the design and manufacturing
   a. Rocket engine **b. 3D–Printed rocket engine**
   c. Automated rocket engine d. Satellite
   e. Answer not known

அக்னிகுல் காஸ்மோஸ் வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான முதல் காப்புரிமையைப் பெற்ற தயாரிப்பின் பெயரைக் குறிப்பிடவும்

a. ராக்கெட் என்ஜின்
b. 3D– அச்சிடப்பட்ட ராக்கெட் என்ஜின்
c. தானியங்கி ராக்கெட் இயந்திரம்
d. செயற்கைக்கோள்
e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE